பன்னிரு சோதிலிங்கத் திருத்தலங்கள்



அமராவதிபுதூர்
வயிநாகரம்
வெ. ராம. சோம. கருப்பன் செட்டியார்
மணிவிழா வெளியீடு
5-4-1975.

சிவமயம்



ஸ்ரீ கற்பக மூர்த்தி விநாயகர்

பிள்ளையார்பட்டி

ஸ்ரீ கற்பகமூர்த்தி விநாயகர்

பிள்ளையார்பட்டி

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
    முழுதகற்றும் முகத்தி னானை
அற்பசுகத்துள் எனையழுத்தா ஐங்கரனைப்
    பிறப்பவமு மகற்றுங் கோவை
சொற்பொழுது புரியாத வணிகர்குலந்
    தினம்ப ணியுந்துணைத் தாளானைக்
கற்பகத்தின் விடியகற்றுங் கற்பகமாம்
    விநாயகனைக் கருத்தில் வைப்பாம்.

—சொக்கலிங்கய்யா.

பன்னிரு
சோதிலிங்கத் திருத்தலங்கள்

தொகுத்தெழுதியோர்

பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன், எம். ஏ., பி. டி.
திரு சபா. அருணாசலம் எம். ஏ.
திரு வ. தேனப்பன் எம். ஏ.
(ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி. தேவகோட்டை)

வெளியீடு
வயிநாகரம் வெ. ராம. சோம. கரு.
சோமசுந்தரம்
அமராவதிபுதூர்
(முகவை மாவட்டம்) 623301

உ

சிவமயம்



ஸ்ரீ மீனுட்சி திருக்கல்யாணம்

உ
சிவமயம்
ஸ்ரீ மீனாட்சி துணை

பதிப்புரை

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றிருக்கிற நாம், செய்தற்குரிய சிவபுண்ணியங்களையே செய்து, எய்தற்கரிய இன்பப் பேற்றை எய்துதல் வேண்டும். இவ்வுண்மையை உணர்ந்து மனவாக்குக் காயங்களைச் சிவபெருமானது வழிபாட்டுக்கு ஆக்கி, நம் முன்னோர்கள் உய்தி அடைந்தார்கள்.

ஆன்மாக்கள், தம்மை வழிபட்டு உய்தி அடையும் பொருட்டுச் சிவபெருமான், இந்நிலவுலகத்தில் திருக்கோயிலில் உள்ள சிவலிங்கம் முதலிய திருமேனிகளிலும், ஆசாரியர் — சிவனடியாரிடத்திலும் வீற்றிருந்தருளுகிறுரென்று அருள் நூல்கள் கூறுகின்றன. சிவபெருமான் வீற்றிருக்கும் திருமேனியாகிய மூர்த்தமும், அம்மூர்த்தம் எழுந்தருளியுள்ள தலமும், அத்தலத்தில் உள்ள தீர்த்தமும் ஆன்மாக்களின் அகவிருளை அகற்றி உள்ளொளியைப் பெருக்குவன.

திருத்தல யாத்திரையை மேற்கொண்டு. புண்ணிய தீர்த்தங்களில் நீராடி மூர்த்திகளை முறையாக வழிபாடு செய்பவர்கள் இம்மை மறுமை நலங்களை எய்துவார்கள் என்பது, பண்டு தொட்டுப் பலரும் அறிந்த உண்மை. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்,

வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே”
என்பது தாயுமான அடிகள் திருவாக்கு.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் பல வற்றுள் 'சோமநாதம்' முதலிய பன்னிரண்டு தலங்களைச் சோதிலிங்கத் தலங்கள் என்று சிறப்பித்துக் கூறுவர். சென்ற இரண்டாண்டுகளுக்கு முன்பு தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தினர், சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் தலைமையில் திட்டம் செய்த திருக்கேதார முதலிய வடநாட்டுத் தல யாத்திரையில் கலந்துகொண்டு சோதிலிங்கத் தலங்களைத் தெரிசிக்கும் பேறு எங்களுக்கு வாய்த்தது.

என் தந்தையார், சிவபூசைச் செல்வர் கருப்பன் செட்டியாரவர்களுக்கு இன்று நிகழும் ஸ்ரீ சிவாக மோக்த ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவின் நினைவாகச் சோதி லிங்கத் தலங்களைப் பற்றிய விளக்கம் கூறும் நூலொன்றை எழுதி வெளியிடவேண்டுமென்று தேவகோட்டை திருவாளர், வெ. நா. மு. இராமநாதன் செட்டியாரவர்கள் விரும்பினுர்கள். அதன்படி தேவகோட்டை சேவுகன் அண்ணுமலை கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், கண்டனூர் திரு அர. சிங்காரவடிவேலன், எம்.ஏ.பி.டி., அக்கல்லூரித் தமிழ்த் துறையைச் சேர்ந்த திருவாளர்கள் சபா. அருணுசம், எம். ஏ , வ. தேனப்பன், எம். ஏ., ஆகியோரால் இந்நூல் எழுதப்பெற்று எங்கள் குருநாதர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களால் பார்வையிடப் பெற்று அச்சாகி வெளி வருகிறது.

இதனை எழுதத் தூண்டிய திரு. இராமநாதன் செட்டியாரவர்களுக்கும், எழுதி உதவிய திரு. சிங்கார வடிவேலன் முதலானோர்க்கும் சோதிலிங்கப் படங்களைப் பார்த்துப் புதிதாக வரைந்து தந்து உதவிய வெ. நா. மு ராம பேரன், முன்னிலை வகுப்பு மாணவன் இராம. பழநி யப்பனுக்கும், நூலெழுதும் வேலையில் உதவிசெய்த தேவ கோட்டை அன்பர்கள் திரு சுப. சின்னவீரப்பன், திரு பழ. பழமலை செட்டியார் ஆகியோருக்கும் நூலை விரைவில் அச்சிட்டுதவிய தேவகோட்டைச் சாலையிலிருக்கும் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நூலைப் பார்வையிட்டு வாழ்த்துரை வழங்கிய குருநாதரவர்கட்கு வணக்கம்.

அன்பர்கள் நூலைப்படித்துப் பயன்பெறுவார்களாக.

அமராவதிபுதூர்,
ஆனந்த பங்குனி 22
உத்தராட நாள்
5—4—1975

அன்புள்ள,
வயிநாகரம் வெ. ராம. சோம.
கரு. சோமசுந்தரம்.

முன்னுரை

சிவபரம் பொருளைச் சோதியாகவும் சுடராகவும் சூழ்ஒளி விளக்காகவும் கண்டு காட்டுவார் மாணிக்க வாசகப் பெருமான். தென்னாட்டிலுள்ள இராமேசுவரமும் வடநாட்டிலுள்ள கேதார முதலிய பதினொரு திருத்தலங்களும் சேர்ந்து 12 சோதிலிங்கத் தலங்களென்று பெரியோர்களால் போற்றப்பெறுகின்றன. சோதிலிங்கத் தலங்களைப் பற்றிய விளக்கங்களை ஒரு சிறு நூலாக எழுதி வெளியிடச் செய்யவேண்டுமென்று பல நாட்களாக எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் அமராவதிபுதூர் வயிநாகரம் வெ. ராம. சோம. கருப்பன் செட்டியாரவர்களால் இப்போது நிறைவு பெறுகிறது. அவர்கள் தமது ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவின் நினைவாக இதை அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில், வயிநாகரம் குடும்பத்தார் செய்த திருப்பணியாதிய சிவபுண்ணியச் செயல்கள் உலகமறிந்தவை. இந்தக் குடும்பத்தில் திரு. நாகப்ப ஐயா, திரு. வேங்கடாசல ஐயா ஆகிய இருவரும் முன்னின்று மதுரைத் திருக்கோயில் முதலிய பல திருக்கோயில் திருப்பணிகளைச்செய்து திருவருள் பெற்றவர்கள். மதுரையில் கோயில் தோன்றிய காலந்தொட்டு மொட்டையாக இருந்த வடக்குக் கோபுரத்தை முழுக்கோபுரமாக்கிய பெரும் புண்ணியவான் திரு. வேங்கடாசல ஐயா.

திரு வேங்கடாசல ஐயாவின் புதல்வர் இராமநாதன் செட்டியார். அவர் புதல்வர் சோமசுந்தரம் செட்டியார். சோமசுந்தரம் செட்டியாரது நன்மகனாக அவரது மனைவியார், காரைக்குடி அ. மு. க. மு. க. கருப்பன் செட்டியார் புதல்வி, அழகம்மை ஆச்சியின் மணி வயிற்றில் 1915ஆம் ஆண்டு ஆனந்த வருடத்தில் கருப்பன் செட்டியார் தோன்றினர். தங்கள் முன்னோர் களின் சிவபுண்ணியச் செயல்களைத் தொடர்ந்து செய்தும் விருத்தாசலம் சிவ ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரிய சுவாமி களிடம் சமய தீட்சையும் பழநி சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளிடம் விசேட தீட்சை யும்பெற்று க்ஷணிகலிங்க பூசையும் சிவஸ்ரீ தத்புருஷதேசி கரவர்களிடம் நிருவாண தீக்ஷையும் பெற்று உடையவர் பூசையும் முறையாகச்செய்துவரும் கருப்பன் செட்டியார் அவர்கள் இந்நூலைத்தமது சாந்திவிழா நினைவாக வெளியிட முன்வந்தமைக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்ளுவதுடன் அவர்கள் பல்லாண்டுகள் சிவப்பணி களைச் செய்து சிறப்பாக வாழ்ந்துவர எங்கள் தலதரு வாகிய ஸ்ரீ கற்பக மூர்த்தியை வணங்கி வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

வெ. நா. மு. இராமநாதன் செட்டியார்.
தேவகோட்டை

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

வாழ்த்துரை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

தேவகோட்டை

வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து, இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான் நம்மை ஆட்கொள்ளுகின்றான். உடம்பில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் சிவவழிபாட்டுக்காகவே, சிவபெருமானால் உதவப் பெற்றன என்பது, ஆன்றோர்கள் அறிந்து கூறிய உண்மையாகும். "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம் வாக்கு காயம், ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ" என்பது சிவஞான சித்தியார்.

சிவவழிபாடு ஆன்மார்த்த வழிபாடென்றும், பரார்த்த வழிபாடென்றும் இருவகைப்பட நிகழ்வது. ஆன்மார்த்த வழிபாட்டில், தனக்கெனத் திருவுருவங்களை ஆசாரியரிடத்திலே விதிப்படி தீக்ஷையுடன் பெற்றுப் பூசிக்கப்பெறும். பரார்த்த வழிபாட்டில் திருத்தலங்களிலுள்ள திருக்கோயில்களில் மூர்த்தங்கள் வணங்கப் பெறும்.

ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இருவகை வழிபாடுகளும் ஒருவருக்கு ஒருங்கே வாய்க்கவேண்டுமானால் அதற்கு அவர் பல பிறப்புக்களில் தவம் செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்து முற்றியதவத்தின் பயனாக விதிப்படி சமய-விசேட, நிருவாண தீக்ஷைகள் பெற்று ஆன்மார்த்த பூசை பரார்த்தாலய வழிபாடு ஆகியவற்றை நியதியாகச் செய்துவருகின்றவர்கள் நமது அன்புருவாகிய அரும்பெறற் செல்வர் வயிநாகரம் வெ.ராம. சோம. கருப்பன் செட்டியாரவர்கள். அவர்களது ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா நினைவாக ஜோதிர்லிங்கத் தல விளக்கங்கள் வெளிவருவதறிந்து மகிழ்கிறோம்.

எங்கள் வயிநாகரம் குடும்பத்தார் அனைவரும், சிவபூசைச் செல்வர் கருப்பன் செட்டியாரவர்களும் அவர்கள் புதல்வர் சோமசுந்தரம், புதல்வி அழகம்மை குடும்பமும் வழிவழியாக நல்வாழ்வு வாழவும் சிவபுண்ணியங்களைச் செய்து சிறப்புறவும் நம் ஆன்ம நாயகராகிய அங்கயற்கண்ணி பங்குடைய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமான் அருள்புரிவாராக.

நலமே தழைக

மணிவிழா வாழ்த்து

மூவிருப தாண்டு முருகன் திருவருளால்
பூவுலகில் எய்தியுயர் புண்ணியன்—மேவு
புகழ் கருப்பன் செட்டியார் பொற்புடனே நீடு
தகவுடனே வாழ்க தழைத்து

அன்பன்,
கிருபானந்தவாரி.

பாட்டுக் கடங்காப் பரமன் திருப்பணியால்
நாட்டுக் கடங்காத நற்புகழை—வீட்டுக்கே
சொந்தமெனக் கொண்டகுடிச் **சோம. கரு.** செல்வரவர்
செந்தமிழாய் வாழ்க சிறந்து.

அய்யாக்கள் செய்தபணி ஆருக ஓடுவதால்
செய்யாக ஓங்கிச் சிறந்துவரும்—தெய்வமகன்
சோம. கரு. நற்குடியார் சோதித் தலங்களெனச்
சேமமுற வாழ்க செழித்து

தாய்மணக்கும் சைவம் தரைமணக்கச் செய்குடும்பம்
வாய்மணக்கும் சீர்த்தியுடன் வாழ்ந்தோங்கச்
—சேய்மணக்கச்
சொக்கன் திருவடியைச் சொல்மணக்க வாழ்த்துகிறேன்
எக்காலும் வாழ்க இனிது.

அன்பன்,

அர. சிங்காரவடிவேலன், எம். ஏ., பி. டி.,
தமிழ்ப் பேராசிரியர்.
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

மணிவிழா வாழ்த்து

கம்பன் அடிப்பொடி

அலைகடலில் கலஞ்செலுத்தி அறத்தோடு
பொருளீட்டி, அவற்றை முற்றும்

கலையோடு பயன்வளரக் கண்ணுதலோன்
கோயில்பல கட்டு தற்கே

உலையாத படியீந்த உயர்வயிநா
கரக்குடியில் உதித்த செல்வன்;

நிலையான சிவபூசை நிதம்புரிந்து
வாழுகின்ற நேய நெஞ்சன். 1

ஆலவாய் முதலாக அரன்மகிழும்
எத்தனையோ ஆலயங்கள்,

சாலவுயர் கோபுரங்கள், தமைப்புதுக்கிச்
சமயநெறித் தருமம் பேணிச்

சீலநிறை திருமடங்கள் செழிக்குமுயர்
நந்தவனம் சிறக்கச் செய்து,

ஞாலமெலாம் புகழ்மணக்கும் நற்குடியில்
தோன்றிவளர் நல்ல நம்பி. 2

அன்னவனே கருப்பாத்தான்; அருள்சோம
சுந்தரன்சேய்; அவனுக் கின்று
மன்னுமறு பதுவருடம் அதுநிறைந்து
மணிவிழா மலரும் போது
சென்னிமதி அணிந்தபிரான் சிவபெருமான்
திருவருளால் செல்வம் ஓங்கி
இன்னுமொரு நூற்ருண்டும் இவன்வாழ
வாழ்த்திடுவோம் இதயம் ஆர! 3

துங்கநிறை தருசோம சுந்தரன்சேய்
கருப்பாத்தான் சுகித்து வாழ,
இங்கிவர்தம் அறம்காத்து, எழில்மக்கள்
மருமக்கள் இலங்கக் காத்துப்,
பொங்கிவளர் தொழில்காத்துப், புகழ்காத்து,
இக்குடியின் புனிதம் காத்துச்,
சங்கரனே! திருமாலே! சதுர்முகனே!
பல்லாண்டு தழைக்கச் செய்வீர். 4

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



அமராவதிபுதூர் வயிநாகரம்

ஸ்ரீமத் நாகப்ப ஐயா

வயிநாகரம் ஸ்ரீமத் நாகப்ப ஐயா
வரலாற்றுக் குறிப்பு

அங்கயற்கண் அம்மையிருந் தரசு செய்யும்
அணிமாடக் கூடல்முதல் பதினுன் காகித்
துங்கமுறும் திருத்தலங்கள் சூழ்ந்த கன்னித்
தொல்நாட்டில் துலங்கமரா வதிபுத் தூரில்
மங்கலமாம் தனவணிக மாண்கு லத்தில்
மன்னுவயி நாகரமா மரபு தன்னில்
எங்கள்வள்ளி யம்மையுயர் இராம நாதர்
எழில்மகவாய் நாகப்பர் இங்குற் ருரே.

அப்பணிசெஞ் சடைப்பரமற் கநேகம் கோயில்
அழகுபெற நினைந்தெழுப்பி ஆத்தூ ரின்கண்
வெப்புறும்மெய்ப் பசிவருத்தும் இரவோர் நாளில்
விரும்பிநறும் குழித்தளிகை சுமந்து மேவித்
துப்பிதழங் கயற்கண்ணி தரப்பெற் றுண்டு
துறைவைகைக் கரைகடவா திருந்தே மேழு
செப்புநூரு டெண்பத்து மூன்று மேடம்
சேர்ந்தமகம் சிவனடிகள் சேர்ந்து ளாரே.


நலம் பெருகுக.

"பாலகவி" வயிநாகரம்
வே. இராமநாதன் செட்டியார்
(தத்புருஷ தேசிகர்)
தேவகோட்டை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



அமராவதிபுதூர் வயிநாகரம்

ஸ்ரீமத் வேங்கடாசல ஐயா

(பின்பக்கம்

வயிநாகரம் ஸ்ரீமத் வேங்கடாசல ஐயா
வரலாற்றுக் குறிப்பு

தேங்கமழும் மலர்க்கொன்றை முடிச்சொக் கேசன்
தேவிமீ னாட்சியருள் சிறக்கும் கன்னி
ஓங்குதிரு நாட்டமரா வதிபுத் தூரில்
உயர்மகுட தனவணிக மரபில் உண்மை
தேங்குவயி நாகரப்பேர்க் குடியில் வந்த
திருராம நாதர்வள்ளி யம்மை சேயாய்
வேங்கடா சலநாமம் விளங்கத் தோன்றி
விருப்பமுடன் திருப்பணிகள் பலசெய் நாரே.


கூடல்நகர் மீனாட்சி கோயில் மொட்டைக்
கோபுரத்தை முழுதாக்கும் குறிப்பு வைத்து
நாடியவர் அனைவோரும் தடைபட் டேங்க
நாகப்ப முன்னவன்சொல் நயந்தே கொண்டு
பீடுயரக் கோபுரத்தை முழுதாய் ஆக்கிப்
பெரியசிவ தருமங்கள் பேணிச் சேர்ந்தார்
கூடியநா லொன்பதெட்டெட் டிற்கும் பத்தில்
குளிருத்தி ரட்டாதி குலவும் நாளே.

நலம் பெருகுக.

''பாலகவி'' வயிநாகரம்
வே. இராமநாதன் செட்டியார்
(தத்புருஷ தேசிகர்)
தேவகோட்டை.

உ

சிவமயம்



வயிநாகரம்

வெ. ராம. சோம. சோமசுந்தரம் செட்டியார்

சோம. அழகம்மை ஆச்சி


உ

சிவமயம்



வயிநாகரம் வெ. ராம. சோம. கருப்பன் செட்டியார்

கரு. அழகம்மை ஆச்சி



சிவபூசைச் செல்வர் அமராவதிபுதூர் வயிநாகரம் சோம. கருப்பன் செட்டியார்

உ
சிவமயம்

பன்னிரு சோதிலிங்கத் திருத்தலங்கள்

தோற்றுவாய்

உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்கு அரிய சிவபெருமான் ஒளிமயமாக விளங்குகிறான். நிலவுலாவிய, நீர் தங்கிய சடைக் கற்றை துலங்க அம்பலத்தே கூத்தாடும் அப்பெருமானைச் சேக்கிழார் பெருமான் 'அலகில் சோதியன்' என்று அகமுருகிப் பாடி வாழ்த்தி வணங்குகிறார். பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சிவபெருமானை வடமொழியில் "துவாதச ஜோதிர்லிங்கம்" என்பர். 'தசம்' என்றால் பத்து; 'துவா' என்றால் இரண்டு. துவாதசம் என்றால் பன்னிரண்டு என்று பொருள். 'ஜோதிர்லிங்கம்' என்ற தொடருக்கு மொழிபெயர்ப்புப் போலப் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் 'அலகில் சோதியன்' என்ற தொடர் அமைந்துள்ளது. பன்னிரு சோதிலிங்கத்தைப்பற்றி எழுதும் இந்நூலுக்குப் பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் அமைத்த தொடர் தோற்றுவாயாக அமைவது தெய்வத் திருவருளே ஆகும். திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தைத் தொடங்க 'உலகெலாம்' என்று சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தது போலச் சிவத்தலங்களைப் பற்றிச்

சிறியேம் எழுதச் சேக்கிழார் பெருமான் வாயிலாகச் சிவ பெருமான் 'அலகில் சோதியன்' என்று அடியெடுத்துத் தந்திருக்கிருன். 'அலகில் சோதியன்' மலர்|சிலம்படியைத் தலைமேற்சூடி இத்திருப்பணியைப் பணிவோடு தொடங்கு கின்ருேம்.

இருளும் ஒளியும்

உலகம் இருள்மயமானதென்றும், உலகத்தை ஒளி மயமாக்குவதே அருளாளர் கடமையென்றும் பெரியோர் கூறுவர். 'மனம்' என்ற ஒன்று வாய்க்காமையினுல் இனம் பெருக்குவதையே நோக்கமாகக் கொண்ட ஏனைய உயிர்கள், 'தம்மைச் சுற்றி இருள் சூழ்ந்திருக்கிறது' என்ற உணர்வே அரும்பாமல் மாய்ந்து போகின்றன. பொறிபுல நுகர்வுகளை அறிவினுல் அடக்கி ஆளும் ஆற்றல் அருளாளர்கட்கு அமைந்திருப்பதனுல் உலகத்தை ஒளி மயமாக்கும் முயற்சியில் மக்களினம் ஈடுபடுகிறது. ஏனைய உயிர்களைவிடச் சற்று விளக்கமான அறிவு மனிதனுக்கு வாய்த்திருந்தும் அவன் அறிவும் கைம்மண் அளவே; அவன் அறியாதது உலகளவு ஆகும். மனிதன் அறிய அறிய அறியாமையே காண்கிருன். சின்னுள் பல்பிணிச் சிற்றறிவாளனுகவே மனிதன் வாழ்ந்து மடிகிருன்.

மனித அறிவு சிற்றறிவாக இருந்தாலும், "தன்னு டைய அறிவு சிற்றறிவே" என்ற உண்மையை உணரும் பெற்றி அவனுக்கு ஆண்டவன் அருளால் அமைந்திருக் கிறது. அதனுல்தான் மனிதப் பிறவியைப் பெரிய பேறு

என்று அறிஞர் கருதுகின்றனர். மனிதப் பிறவியை, "அறிவறிந்த மக்கட் பேறு" என்றும் அதனைக் காட்டிலும் பெரிய பேற்றைத் தாம் அறியவில்லை என்றும் வள்ளுவப் பெருந்தகை உள்ளுள் உவக்கிறார்.

காடு வெட்டி நாடாக்கியும் கழனி அமைத்துப் பசி நீக்கியும் பொருள் கொடுத்து அருளீட்டியும் மனித உலகம் நாளும் நாளும் முன்னேறி வருகிறது. எவ்வளவு தான் மனிதன் முன்னேறினாலும் 'உன் வாழ்க்கை இவ்வளவுதான்' என்று இறைவன் காட்டிவிடுகிறான். உற்றார் பகையாகி விடுகின்றனர். கற்ற கல்வி கைவிட்டு விடுகிறது. நேற்று இருந்தவன் இன்றில்லை என்ற நிலையே மனித வாழ்வின் புனிதமாகிறது. நிலையாமையே நிலையானதாக இருப்பதால், அலையும் மனத்திற்கு மனிதன் அமைதி தேட முயன்றான். பொருள் நிலையில்லை என்று உணர்ந்த மனிதன் அருளே நிலை என்று கண்டு கொண்டான்.

அறியாமை இருள் சூழ்ந்து கிடந்த உயிரை அறிவுப் பாதையில் அழைத்துச் செல்லும் கடவுள் ஒளியென்று உணர்ந்து கொண்டான். வெளியிருளைப் போக்கிப் பொருள்களை விளங்கச் செய்யும் கதிரவன் போல, உள்ளிருளைப் போக்கி உயிர்களை ஒளிமயமாக்கும் சிவபெருமானை மெய்யறிவாளர்கள், சோதியே! என்றும், சுடரே! என்றும் ஓதி உணர்ந்தனர். அவனன்றி ஓரணுவும் அசையாது என்று கண்டுணர்ந்த மெய்யடியார், உள்ளத்து இருளையும்

உலகத்து இருளையும் ஒருசேரப்போக்கி வழிகாட்டும் பரம்பொருளை ஒளிவடிவாகவே வழிபட்டனர். இருள் நீக்கி ஒளிகாட்டும் எம்பெருமானைப் புலவர் பெருமக்களின் அருள்வாக்கில் இனிக்காண்போம்.

கவிஞர் வாக்கிற் பொருந்திய பேரொளி

கருவிலே திருவமைந்த கவிஞர் பெருமக்களைக் கடவுள் தன் சார்பாளியாகவே படைத்தனன் போலும்! முதலாளியின் முத்திரை மேலாளிடம் அமைந்திருப்பது போலக் கடவுளின் அருள் முத்திரை பாவலர் நாவில் படிந்திருக்கிறது. உலக இருளில் மறைந்து கிடக்கும் உண்மையொளியைப் பாவலர் தம் உள்ளொளியால் உணர்ந்து விடுகின்றனர். உள்ளத்தில் ஒளியிருப்பதால் அவர்களுக்கு வாக்கிலும் ஒளிபிறக்கிறது. அலகில் ஒளி யாய் அமைந்து விளங்கும் பரம்பொருளை அகவொளி யாற் கண்டு புற உலகத்தார்க்கும் புலப்படுத்துகின்றனர். உள்ளொளி பெருக்கும் ஒளிப்பிழம்பாம் சிவபெருமானைத் தேவாரம் பாடிய தெய்வப் புலவர் வாக்கிலும் திருவாசகம் பாடிய மணிவாசகர் மலர்நாவிலும் பரக்கக் காணலாம். ஒளியென்று சிவபெருமானை உருகிப் பாடிய இடத்தை யெல்லாம் சுட்டிக்காட்டினுல் பட்டியல் நீளுமாதலின் சோற்றுப் பதம்போல ஒருசில தெய்வ வாக்குகளையே இங்கே காட்டுகிறோம்.

"நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந்(து) எய்தும் நின்மலன்"

என்று ஞானசம்பந்தப் பெருமான் திருப்பூவணப்பதிகத்திற் பாடுகிறார். மனம் கரைத்து மலம் கெடுக்கும் நின்மலனும் சிவபெருமானை நினைவிற் கொண்டால் உள்ளம் ஒளிமய மாகும்; அவன் ஒளிவடிவாகி உள்ளத்தில் வந்து எய்துவான்; என்பது மேற்கண்ட பதிகத்தின் உட்பொருள்.

"ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்று சோதிக்க முடியாச் சிவச்சோதியைச் சம்பந்தர் தம் சொற்சோதியாற் காட்டிச் சொக்கவைக்கிறார்.

"நன்றும் ஒளியான் ஒளிசிறந்த பொன்முடிக்கடவுள்" 'தன்தொண்டர் நெஞ்சிருள் கூரும்பொழுது நிலாப் பாரித்து அஞ்சுடராய் நின்றான்', "உள்ளத்துள் ஒளியும் ஆகும் ஒற்றியூர் உடைய கோவே" முதலியன சிவபெரு மான் ஒளியுருவானவன் என்பதற்குச் சம்பந்தர் அளிக்கும் சத்தியச் சான்றுகள்.

'பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்' என்று சிவபெருமானை நாவுக்கரசர் அழைத்து அவன் 'எரிபுரை மேனியினான்' என்று காட்டுகிறார்.

ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரம் தோளுடை
யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே

என்ற பாட்டு பூவுக்கரசருக்கு அஞ்சாத நாவுக்கரசர் யாவுக்கும் அரசராம் சிவபெருமானை ஆரூரில் கண்டு பாய்ச்சிய அமுத வெள்ளமாகும். சிவபெருமான் திருவடி ஆயிரம் தாமரையின் செம்மையை வெல்லும். அவனுடைய திருத்தோள்கள் ஆயிரம் பொன்மலையைக் காட்டிலும் பேரொளி பரப்பும். அவனுடைய நீண்ட சடை ஆயிரம் கதிரவனின் கதிர்களைக் காட்டிலும் ஒளிவிடும். கண்ணாயிரம் கொண்டாலும் காணமுடியாச் சிவபெருமானின் செந்நிற உருவை எண்ணாயிரம் போட்டுப் பாடி மகிழ்கிறார் நாவுக்கரசர்.

தண்ணார் மதிசூடியாகிய சிவபெருமானைத் "தழல் போலும் திருமேனீ" என்று பெயரிட்டுத் தோழமைத் தன்மை தோன்றச் சுந்தரர் அழைக்கிறார்.

மணிவாசகப் பெருமான் வாக்கிலும் சிவபெருமான் ஒளிமயமாகவே உலாவருகிறான். "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" என்பது மணிவாசகரின் பாவைப்பாட்டு.

இராமன் புகழ்பாடும் கம்பரும், சிவபெருமானைத் 'தழற்புரை சுடர்க்கடவுள்' என்றே பாடுகிறார்.

பன்னிரு சிவலிங்கங்கள்

காரிருள் நீக்கும் கதிரவன்போல உள்ளப் பேரிருள் நீக்கும் சிவபெருமானைப் பேரொளி என்று புலவர் பொருந்த மொழிந்துள்ளனர். தமக்கு இயற்கையாக

அமைந்த பக்தியாலும், தமிழ் வடமொழி நூல்களைப் பயின்றமையாலும், ஒளியுருவில் அமைந்த சிவபெருமானை சிவலிங்க வடிவில் திருக்கோவில்களில் அமைத்து இந்திய மக்கள் வழிபட்டனர். பாரத நாடு தழுவிய பன்னிரு திருத்தலங்களில் சிவனை அமைத்து மெய்யடியார் வழி பட்டுய்ந்தனர்.

உலகம் உய்ய அமைந்த திருத்தலங்களைக் கண்டு வணங்கும் பேறு அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்ற பேருள்ளப் பாங்காலேயே 'பன்னிரு சோதிலிங்கத் திருத் தலங்கள்' என்ற இந்த அருள் நூலைச் சிவப்பணியைத் தவப்பணியாகக் கருதிச் செய்துவரும், வயிநாகரம் குடும் பத்தைச் சேர்ந்த அமராவதிபுதூர் உயர்திரு சோம. கருப்பன் செட்டியார் என்ற பெரியார் தம் மணிவிழா வெளியீடாக மலரச் செய்கின்றார்கள்.

பன்னிரு சோதிலிங்கத் திருத்ததலங்கள்

புற இருளைப்போக்கும் கதிரவர் பன்னிருவராக விளங்குகின்றனர். அகவிருளை நீக்கும் சைவத் திருமுறை களும் பன்னிரண்டாகவே திகழ்கின்றன. உள்ளும் புற மும் ஒளிமயமாகத் திகழும் சிவபெருமான் பிரமரந்திரத் திற்கு மேல் பன்னிரண்டு அங்குல அளவில் ஆன்மாக் களால் ஓர்ந்துணரத்தக்க பொருளாக விளங்குகிறான் என்பது அநுபூதிமான்களின் பட்டறிவு. துவாதசாந்தப் பெருவெளியில் அனைத்தும்கடந்த பரநாத மூலத்தலத்தில் முளைத்தெழுந்த ஒளிப்பிழம்பை நம் முன்னோர்கள் பன்னி ரண்டு திருத்தலங்களில் கண்டு வழிபட்டு நற்கதியடைந் திருக்கின்றனர்.

திருமாலுக்கும், திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய பிரமனுக்கும் யார் முதல்வர் என்ற போட்டி முனைப்பு முளைத்த, பொழுது, இருவருக்கும் இடையே 'யானே முதல்வன் என்ற கருத்தை உணர்த்தச் சிவபெருமான் சோதி வடிவில் தோன்றினன். தானே தோன்றிய சிவலிங்க உருவங்கள் அமைந்த தலங்களுக்குப் 'பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள்' எனப் பெயர் அமைத்தனர் பண்டையோர்.

பன்னிரு சோதிலிங்கத் திருத்தலங்களும் பாரத நாட்டின் ஒன்றுமைக்குச் சான்ருகக் காசிமுதல் இராமேசுவரம் வரை அமைந்திருக்கின்றன. மொழி, இன வேற்றுமைகளைக்கடந்து சிவநேசச் செல்வர்கள் இப்பன்னிரு தலங்களில் ஒளிமயமான சிவபெருமானை ஓதியுருகி வழிபட்டு உயர்வெய்துகின்றனர். தென்னுடைய சிவபெருமான் எந் நாட்டவருக்கும் இறைவனுக இருக்கின்ருன் என்ற உண்மை இத்திருத்தலங்களால் வலியுறுகிறது.

பன்னிரு சோதிலிங்கத் திருத்தலங்களின் பெயர்கள் வருமாறு:—

1. சோமநாதம்
2. திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்)
3. உஜ்ஜைனி மாகாளம்
4. ஓங்கார மமலேசுவரம்

5. வைத்தியநாதம்

6. பீமசங்கரம்

7. இராமேசுவரம்

8. நாகேசம்

9. வாரணுசி (காசி)

10. திரியம்பகம்

11. கேதாரம்

12. குஸ்மேசம் (குஸ்ருணேசம்)

மேற்கண்ட திருத்தலங்களைத் தொகுத்துச் சுட்டும் வடமொழிச் சுலோகமும் தமிழ்ப் பாடலும் வருமாறு:—

ஸௌராஷ்ட்ரே ஸோமநாதம் ச ஸ்ரீசைலே மல்லிகார்ஜுனம் ।
உஜ்ஜயின்யாம் மஹாகாளம் ஓங்கார மமலேச்வரம் ॥

பரல்யாம் வைத்யநாதம் ச டாகின்யாம் பீம சங்கரம் ।
ஸேதுபந்தே து ராமேசம் நாகேசம் தாருகாவனே ॥

வாராணஸ்யாம் து விச்வேசம் த்ரயம்பகம் கௌதமீதடே ।
ஹிமாலயே து கேதாரம் குஸ்மேசம் ச சிவாலயே ॥

ஏதாநி ஜ்யோதிர் லிங்காநி ஸாயம் ப்ராத: படேந்நர: ।
ஸப்த ஜன்ம க்ருதம் பாபம் ஸ்மரணேந விநச்யதி ॥

சோம நாதம் ஸ்ரீசைலம்
சோதி வாழும் உஜ்ஜைனி
ஓம்போல் ஓங்கும் ஓங்காரம்
உளநோய் போக்கும் திருவைத்தி
பீம நாமச் சங்கரமும்
பெருமான் ஏத்தும் இராமேசம்
காமம் கொல்லும் நாகேசம்
காசி திரியம் பகத்தோடு
பாடல் பெற்ற கேதாரம்
பக்தர் ஏத்தும் குஸ்மேசம்
ஆடல் வல்லான் சிவபெருமான்
அலகில் சோதி வடிவாகி
நாடு முற்றும் அருள்காட்டும்
நலமார் தலங்கள் பன்னிரண்டாம்
நாடிச் சென்று வழிபடுவார்
நல்ல கதியை அடைவாரே!

— பேராசிரியர் அர. சி

மேற்கண்ட திருத்தலங்களைப் பற்றிய செய்திகளை நூல்களின் வாயிலாகத் திரட்டி எழுதும் தெய்வப்பணி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அமராவதிபுதூர் உயர்திரு சோம. கருப்பன் செட்டியார் அவர்களின் அன்பாணையால் நாங்கள் சென்று காணு இடங்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுகிறோம். ஒளி வடிவான சிவபெருமானே எங்கள் உள்ளத்திலும் எழுதும் கோலிலும் தோன்றுத் துணையாய் நின்று வழிகாட்ட வேண்டும்.

பாலகவி மேதகு சிவநெறிச் செல்வர் வயிநாகரம் இராமநாதப் பெரியார் வாழ்த்துரை எழுதும்பேறு இந் நூலுக்கு வாய்த்திருக்கிறது.

பயண நூல்கள் சிலவற்றை அடியொற்றி எழுதிய இந்நூலில் ஏதேனும் செய்திப்பிழை நேராமல் சிவபெருமான் காப்பாளுக. சென்று, கண்டுவந்த பெரியவர்கள், தம் கருத்து மாறுபாடுகளேத் தெரிவித்தால் தலேவணங்கி ஏற்றுத் திருத்திக்கொள்வோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிரேம்.

நீல மயிலோடு நெஞ்சிற் குடிகொண்ட பாலமுருகன் திருவடித் துணேயோடு பன்னிருசோதிலிங்கத் திருத் தலங்களேப் பற்றிய செய்திகளே எழுதத்தொடங்குகிரேம்.

எழுதும் பணியை எமக்களித்த மணிவிழா நாயகர் திரு. சோம. கருப்பன் செட்டியார் அவர்கட்கும், வாழ்த்துரை என்னும் பொன்னுரை தந்து எம் எழுத்தைப் பெருமைப் படுத்திய பாலகவி அவர்கட்கும் எம்மை மணிவிழா நாய கரிடம் ஆற்றுப் படுத்திய தேவகோட்டைப் பெரியவர் உயர்திரு வெ. நா. மு. இராமநாதன் செட்டியார், திரு சுப. சின்னவீரப்பன், திரு பழ. பழமலே ஆகியோருக்கும் நன்றிகூறி எம்மை இப்பணிக்கு ஆளாக்கிய எல்லாம் வல்ல சிவபெருமான் திருவடிகளே வணங்கிப் பன்னிரு சோதிலிங்கச் செய்திகளே அடுத்துவரும் பகுதிகளில் தொடர்கிரேம்.

12

திருத்தலங்கள்

அடியவர் துயர்தீர்க்க ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் ஊர்களைத் திருப்பதிகள் என்றும் திருத்தலங்கள் என்றும் கூறுவர். ஆழ்வார்கள் இத்தகைய பதிகளைத் திவ்விய தேசம் என்பர்.

திருத்தலங்களில் நிகழ்ந்த அற்புதங்களின் அடிப்படையில் தலங்களைப் பலவாருகப் பிரித்துள்ளனர். நிலத்தின் கீழெல்லாம் நீர் பரவி இருந்தாலும் தோண்டுகின்ற இடத்தில் நீர் சுரப்பதுபோல, அங்கிங்கெனுதபடி ஆண்டவன் எங்கும் பரவியிருந்தாலும், ஆலயங்களிலும் திருத்தலங்களிலும், அன்பர் கொண்டாடும் அளவிற்கேற்ப ஆண்டவனுடைய அருட்பொலிவு அமைகிறது. திருப்பதிக்குக் கூட்டம் கூடுகிறது. செந்தூர் முருகனைச் சேவிக்கும் கூட்டம் நாள்தோறும் கூடி வருகிறது. அயோத்தி, வடமதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்திகை துவாரகா ஆகிய ஏழு தலங்களும் முக்தித் தலங்கள் என்று பக்தர்களால் கொண்டாடப்படுகின்றன.

திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணுமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்பன ஐம்பூதத்தலங்கள். பிறந்தால் திருவாரூரும், கண்டுவணங்கினுல் சிதம்பரமும், இறந்தால் காசியும், நினைத்தால் திருவண்ணுமலையும் வீடு அளிக்கக்கூடிய திருத்தலங்கள் என்பது மெய்யடியார் கண்ட உண்மை. திருவெண்காடு, திருவையாறு,

மயிலாடுதுறை, திருவிடைமருதூர், சாயாவனம், திரு வாஞ்சியம், இவ்வாறும் காசிக்கு நிகரான திருத்தலங்கள். தேவிபாகவதம் என்ற நூலில் காசி, கேதாரம், உஜ்ஜயினி, நாசிக், திரியம்பகம் இவ்வைந்தும் சித்திக்கு வழிகாட்டும் ஐந்து விளக்குகள் என்று கூறப்பட்டுள்ளன.

திருவெண்காட்டுப் புராணம் என்ற நூல் சில தலங் களை வாயாற் சொன்னாலே முக்திவரும் என்று ஒரு வெண்பாவில் கூறுகிறது. அவ்வெண்பா வருமாறு:

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்-நெல்லைகழற்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

சிவபெருமானுடைய எட்டு வீரட்டானங்கள் இவையென ஒரு பாட்டு கூறுகின்றது. வீரட்டானம் என்ற சொல், வீரஸ்தானம் என்ற சொல்லின் திரிபு. வீரஸ்தானம் என்ற சொல், வீரம்+ஸ்தானம் என்று பிரிந்து வீரச்செயலைப் புரிந்த இடம் என்ற பொருளைத் தரும். போகத்தையும், மோட்சத்தையும் ஒருசேரக் கொடுக்கும் தலங்கள் இவை என்றும் திருவரங்கம் முதலானவற்றை வகைப்படுத்தி யுள்ளனர். சத்த விடங்கத் தலங்கள் என்ற ஒரு பாகு உண்டு. அந்த வகையிலேயே சோதிலிங்கத் தலங் கள் பன்னிரண்டு என்று வகுத்துள்ளனர். சோதிலிங் கத் தலங்களுள் முதலாவது சோமநாதம். சோமநாதம் பற்றிய செய்திகளை இனித் தொடர்ந்து பார்ப்போம்.

1. சோமநாதம்


முத்தின்றாழ் வடமும் சந்தனக் குழம்பும்
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற்போல்
அத்தனுர் உமையோ டின்புறு கின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே
(சம்பந்தர்)

சௌராட்டிர மாநிலத்தில் கத்தியவார் தீபகற்பத்தின் தென் கரையிலிருக்கும் நகரமாகிய சோமநாதத்தைச் சோமநாதபுரம் என்றும் வழங்குவர். இந்நகர் வரலாற்றுச் சிறப்பும், சமயச் சிறப்பும் வாய்ந்தது. பதினெட்டுமுறை படையெடுத்த கஜினிமுகமது இந்த ஊர்ச்சிவன்கோயிலில் உள்ள செல்வத்தைத்தான் கொள்ளையடித்தான். அடியவரின் அன்பைக் கொள்ளையடித்ததற்காக ஆண்டவனின் செல்வத்தைக் கஜினிமுகமது கொள்ளையடித்தான் போலும்!

இஃதொரு கடற்கரை நகரம். இதன் கடற்கரை மேற்கிந்தியாவில் உள்ள அழகிய கடற்கரைகளில் ஒன்று. இப் பட்டினத்திற்குக் கிழக்கே ஐந்து ஆறுகள் கலக்கின்றன. இவற்றுள் இரண்டு ஆறுகள் புலப்படா ஆறுகள் ஆகையால், மூன்று ஆறுகள் கூடுகின்ற இடம் என்ற பொருளில் இப்பகுதி திரிவேணி சங்கமம் என்று கூறப்படுகின்றது.

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 1



சோமநாதம் (சௌராஷ்ட்ரா)

சௌராட்டிர மாநிலத்தில் வீரவால் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து சோமநாதனின் ஆலயம் உள்ள பிரபாசபட்டினம் மூன்று மைல் தொலைவில் உள்ளது.

இங்குள்ள சிவன் கோயில் வரலாற்றுச் சிறப்புடையது. அந்தச் சோமநாதர் ஆலயம் வைடூரியமணி பர்வதம் என்ற குன்றின்மேல் அமைந்து விளங்குகின்றது. பைரவ சிலை என்னும் மலை அடிவாரத்தில் அமைந்திருக்கிறது. இதற்கு அண்மையில் சூரஜ்மந்திர் என்னும் சூரியன் கோவில் இருக்கிறது. சோமநாதர் கோவில் முதலில் பொன்னாலும், பிறகு வெள்ளியாலும், அதன் பிறகு மரத்தாலும், அதற்கடுத்துக் கல்லாலும் கட்டப்பட்டது என்பர். இக்கோயில் பலமுறை அழிக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வரலாற்றுப்புகழை அடைந்திருக்கிறது.பழைய கோவிலில் உள்ள சிற்பங்களைப் பொருட்காட்சி சாலைகளில் வைத்துள்ளனர்.

இக்கோயில் திருப்பணியை முன்பு இந்தூர் மகாராணி அகல்யாபாய் மேற்கொண்டார். பின்னர் காலஞ்சென்ற வல்லபாய் படேல் அவர்களால் நிறுவப்பட்ட ஒரு குழு, ஆலயத் திருப்பணியை ஒரு கோடி ரூபாய் செலவில் செய்தது. கல் திருப்பணி முடிந்த பிறகு சிற்பங்கள் செதுக்கப்பட்டன.

ஆலயம் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. ஆலயம் இருக்கும் ஊர் பிரபாசபட்டினம் எனப்படும். ஆலயத்தில் அமைந்திருந்த பெருமான் உருவம் பளிங்குபோல்

தூய்மையாக விளங்கியதாகக் கூறுகின்றார்கள். கோயிலை அடுத்துப் பாலகதீர்த்தம் என்னும் திருக்குளம் இருக்கிறது. ஆலயத்தின் முதற் பொருளான சிவலிங்கம் நிலத்துக்கடியில் மறைவாக உள்ளது. அது, தானே தோன்றியது. தொட்டுப்பார்த்தே உணரத்தக்க சிறிய வடிவினது. மேற்புறத்தில் யாவரும் காணும்படி மற்றொரு சிவலிங்கம் உள்ளது. இது பிரம்மாவினால் நிறுவப்பட்ட "பிரும்மசிலை" எனப்படுகிறது.

புராண வரலாறு

துவாரகைக் கண்ணன் வேடனால் அடிபட்டு இங்கே உடல் நீத்ததாகப் புராணங்கள் கூறும். அவருடைய உடல் அடக்கம் திரிவேணி சங்கமத்திற்கு அருகில் என்று இதிகாசம் கூறுகிறது. வடநாட்டு வைணவத் திருப்பதியாகிய துவாரகை, சோமநாதபுரத்திலிருந்து 250 கல் தொலைவில் இருக்கலாம் என்பர். சந்திரன் தன்னுடைய மனைவிகள் இருபத்தெழுவரையும் ஒரே வகை அன்புடன் நடத்தாமையால், சினம் கொண்ட சந்திரனின் மாமன் தக்கன், காசநோய் அடைந்து உடல் மெலியும்படி சந்திரனுக்குச் சாபமிட்டான். அந்நோயால் துன்புற்ற சந்திரன், பிரபாசபட்டினத்தை அடைந்தான். மிருத்யுஞ்ஜய மந்திரத்தைப் பத்துக் கோடி முறை உருவேற்றினான். சிவபெருமான் சந்திரனுக்கு அருள் புரிந்தான். சோமனாகிய சந்திரனுக்கு அருள் காட்டிய நாதனாக சிவன் விளங்கியமையால் "சோமநாதன்" என்ற பெயரைப் பெற்றான். இவ்வூருக்கும் சோமநாதபுரம் என்ற பெயர் வந்தது.

சோமநாதரை வழிபட்டால் முற்பிறப்பை அறிவர். சோமநாதபுரம் பயணத்தை மேற்கொள்வோர் ரிணமுக்தேஸ்வரரையும் வழிபட வேண்டும். சோமநாத சோதி லிங்கத்திற்கு மகாநதிக்கரையில் உள்ள அந்தகேச லிங்கம் துணை லிங்கமாகும்.

சோமவாரத்தில் வரும் மதிமறை நாளின் இரவு (அமாவாசை இரவு) வழிபடுதற்குச் சிறப்புடையதென்பர். கிரகண காலமும் மிகச் சிறந்ததென்று கூறுவர்.

சந்திரனுல் நீராடப்பட்ட சோமகுண்டம் முதலான பலவேறு தீர்த்தங்கள் இங்கே உள.

சாளுக்கிய மன்னர்களுக்குச் சோமநாதர் குலதெய்வமாக விளங்கினர். சாளுக்கிய மன்னர்கள் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளனர். ஒரு முகமதிய அரசன் சிவலிங்கத்தை அப்புறப்படுத்தி ஒரு மசூதியாக்கினன். கி. பி. 1500இல் மறுபடியும் இது சிவன் கோயிலாயிற்று. பரோடா மன்னர்களும், ஆங்கிலேயர்களும் இக்கோயிலை மேற்பார்த்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் இருக்கும் இத்திருத் தலத்திற்குப் பல வழியாகச் செல்லலாம். பம்பாயிலிருந்து வீரவால் என்னும் ஊருக்குப் படகுவசதி உண்டு. வான ஊர்தி வழியாகச் சென்று காஷ்கோட் (Kashod) என்னுமிடத்தில் இறங்கினல், அங்கிருந்து 24 கல் தொலைவில் பிரபாச பட்டினம் உள்ளது. அகமதாபாத்திலிருந்து ஜோனகாட் வழியாகவும் செல்லலாம். இத் திருத்தலத்தில்

வண்டி வசதிகளும், தங்குவதற்கு இட வசதிகளும் நிறைய உள்ளன.

ஏனைய சோதிலிங்கத் தலங்களைப் போலவே இங்கும் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சோதி லிங்கம் சிவராத்திரி நள்ளிரவில் தோன்றியதால் எல்லாச் சோதிலிங்கத் தலங்களிலும் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



ஜோதிர்லிங்க ஸ்தலம் - 2



ஸ்ரீமல்லிகார்ச்சுனம் (ஸ்ரீசைலம்)

(ஆந்திரப்பிரதேசம்)

2. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)

அண்ணுமலை ஈங்கோயும் அத்தி முத்தா
றகலா முதுகுன் றங்கொடுங் குன்றமும்
கண்ணூர் கழுக்குன்றம் கயிலை கோணம்
பயில்கற் குடிகா ளத்திவாட் போக்கியும்
பண்ணூர் மொழிமங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணி நின்றே
எண்ணுய் இரவும் பகலும் எந்நாளும்
இடும்பைக் கடல் நீந்தலாம் காரணமே

சம்பந்தர்

மல்லிகார்ச்சுனம், ஸ்ரீசைலம் என்றும் அழைக்கப்படும் திருப்பருப்பதம் தெலுங்கு நாட்டிலுள்ள சோதிலிங்கத் திருத்தலமாகும். அருச்சுனத் திருத்தலமாதலால் இது மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் பெற்றது.

இத் திருத்தலத்தைத் தேவாரம் திருப்பருப்பதம் என்று கூறுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பதிகமும் பெற்ற பெருமை இப் பதிக்கு உண்டு. கொடிய வன விலங்குகளும் கொள்ளைக் கூட்டத்தாரும் மிக்க காட்டுப் பாதையைக் கடந்து அந்த நாளில் இத் தலத்தை அடைந்த சுந்தரர், “செல்லல் உறவரிய சீ பருப்பத மலை” என்று பாடியுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் அமைந்திருப்பதால் இத்தலம் பாரத நாட்டின் நடுப்பகுதியில் விளங்கும் பேறு பெற்றிருக்கிறது. தெலுங்கு மாநிலத்தில் குண்டக்கல்-குண்டூர்

பாதையில் நந்தியால் நிலையத்திலிருந்து 70 கல் தொலைவில் உள்ள மலைமேல் அமைந்த தலம் இது. வடக்கிலிருந்து வருவோர் ஐதராபாத்திலிருந்து புகை வண்டியில் கர்நூல் சென்று அங்கிருந்து சாலை வழியாக ஆத்மகோர் சென்று திருப்பருப்பதத்தை அடையலாம். மேற்கிலிருந்து வருவோர் பம்பாய், குண்டக்கல், நந்தியால் ஆத்மகோர் என்ற முறையில் இத்தலத்தை அடையலாம். தென்னாட்டினருக்கும் இதுவே வழி கிழக்கிலிருந்து வருவோர் 70 கல் மலைப்பாதையிற் சென்று இத் தலத்தை அடையவேண்டும். கடப்பையிலிருந்து 100 கல் தொலைவில் சாலை வழியாகவும் செல்லலாம்

இத்தலம் சைலாதி வழிபட்டு அருள்பெற்ற தலமாகும். இறைவன் திருப்பெயர் பருப்பத நாயகன். இறைவி பருப்பத நாயகி. தீர்த்தம் பருப்பத தீர்த்தம்.

கிறித்து பிறப்பதற்கு முன்பே இந்த மலையின் உச்சியில் புத்தசங்கம் அமைந்திருந்தது என்று சீன நாட்டுப் பயணிகள் கூறுகின்றனர்.

இங்கிருக்கும் கோயில் இப்போதும் நல்ல நிலையில் உள்ளது. இவ்வாலயத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் பல உள. விஜய நகர அரசர்களும், கிருஷ்ணதேவ ராயரின் அமைச்சரும், சாளுவ அரசரிற் சிலரும் இக் கோயில் திருப்பணியில் ஈடுபட்ட செய்திகளைக் கல் வெட்டுக்கள் பலபடக் கூறுகின்றன. நந்தவனம், திருக் குளம், திருமண மண்டபங்கள், பொற்சிலைகள், பொற் கிண்ணம், வெள்ளிமேடை, பொற்றூண்கள், நவமணிகள், பட்டாடைகள், அடியவர்க்கு உணவளிக்க நிலங்கள்,

வழிபடவரும் அடியவர்கட்குத் தங்குமிடங்கள் படிக்கட்டுக் கள், பொற்கலசங்கள், முதலிய திருப்பணிகளைப் பல்வேறு மன்னர்கள் செய்த வரலாற்றுச் செய்திகள் கல்மேல் எழுத்தாய் இன்றும் காட்சி தருகின்றன.

திருநந்திதேவர் மலைவடிவமாகிச் சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இங்குள்ள கோயிலின் தலைவாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலின் உட்புறம் பல தூண்களை உடைய மண்டபம் உள்ளது. மண்டபத்தின் நடுவில் நந்திகேசுவரரின் கல்லாலான நெடிய பெரிய திருமேனி அமைந்துள்ளது. இறைவனுக்குப் பின்புறமாகத் துர்க்கை கோயில் அமைந் துள்ளது. கோயிலைச் சுற்றிச் சிறிய பல சிவாலயங்கள் உள்ளன.

கிருஷ்ணை ஆறு மலையின் அடிவாரத்தைத் தொட்டுச் செல்கிறது. இவ்வாறு ஆலயத்தின் அடிப்பகுதியில் ஓடு வதால் இதனைப் பாதாளகங்கை என்பர். ஆற்றின் கரை பாறையால் அமைந்துள்ளது. நீராடுதுறை இயற்கை யாய் அமைந்தது.

இத்தலத்திற்கு ஆறுகல் தொலைவில் சிகரேசுவரர் ஆலயம் என்னும் சிவன்கோவில் உள்ளது. பயணிகள் அங்கே சென்று அங்கிருந்து பருப்பதநாயகர் கோயிலின் சிகரத்தைப் பார்த்து மகிழுவர்.

புராண வரலாறு

பிள்ளையாரும் முருகனும் விளையாடிக்கொண்டிருந்தனர். அம்மையும் அப்பனும் தம்மக்களுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று அவர்கள்முன் பேசிக்கொண்டிருந்தனர். செவியுற்ற பிள்ளைகள் இருவரும் தமக்கே முதலில் மணம் முடிக்க வேண்டும் என அடம்பிடித்தனர். சிவபெருமான் புதல்வரை அருகழைத்து உலகத்தை முதலில் சுற்றிவருபவனுக்கு முதலில் திருமணம் என்று கூறி ஒரு போட்டியை வைத்தார். பிள்ளையார் தாய்தந்தையரை ஏழுமுறை வலம் வந்து பெற்றோரைச் சுற்றுவது பேருலகைச் சுற்றுவதாகும் என்ற சாத்திரச் சான்றுகாட்டி முதலில் மணமுடிக்க வேண்டினர். போட்டி முடிவை ஒத்துக்கொண்ட சிவபெருமான் வாக்களித்தபடி, மூத்த மகனுக்கு விசுவரூபன் மகளிரான சித்தி, புத்தி என்ற இருவரையும் மணம்புரிவித்தார். உலகம் சுற்றிக் காலம் தாழ்த்தி வந்த முருகப் பெருமான் செய்தியறிந்து சினமுற்றான். கிரௌஞ்சமலை சென்று குடியேறினன். அங்கே பாலதுறவியாகிக் 'குமாரப் பிரம்மச்சாரி' என்ற திருப்பெயருடன் இன்றும் விளங்குகிருன். முருகனின் பிரிவாற்ருமையால் அம்மையும் அப்பனும் கிரௌஞ்சகிரி சென்றனர். முருகன் வேறிடம் செல்ல முயன்ருன். தேவர்களின் வேண்டுகோட்கிசைந்து மூன்றுயோசனை தொலைவில் முருகன் தங்கினன். பார்வதியும் பரமசிவனும் தங்கிய இடமே திருப்பருபதமாகும். அங்கே மல்லிகார்ச்சுனர் என்ற திருப்பெயருடன் சோதிலிங்க வடிவினராய்

இறைவன் திருக்காட்சி வழங்கி வருகிறுர். மறைமதி நாளில் சிவபெருமானும் நிறைமதிநாளில் அம்மையும் முருகனேக்கண்டு மகிழ்கின்றனர்.

திருப்பருப்பதச் சிவலிங்கத்திற்குப் பிருகுபருவதத் திற்கு அண்மையில் அமைந்திருக்கும் உருத்திரலிங்கம் துணேலிங்கமாகும்.

திருப்பருப்பதத்தின் சிகரத்தைக்கண்டவன் மறுபிறவி அடையான் என்பது அடியவர் பட்டறிவு. லிங்காயத் துக்கள் என்னும் சிவமதப் பிரிவினர் திருப்பருப்பதத்தை நிலவுலகக் கயிலாயம் எனக் கருதித் தலேமேல் வைத்துக் கொண்டாடுகின்றனர்.

கண்ணுக்கு எட்டியவரை காடுகளால் சூழப்பட்ட இத்தலத்தை அடைவது அரிதென்ருலும், இதன் இயற்கை அமைப்பு கண்ணுக்கும் இறைவன் திருக்காட்சி மனத்துக்கும் விருந்தளிப்பன.

௫. உஜ்ஜைனி மாகாளம்


மருகல் உறைவாய் மாகா ளத்தாய் மதியம் சடையானே
அருகல் பிணிநின் அடியார் மேல அகல அருளாயே
கருகல் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப் படியானே.
—சுந்தரர்

மத்தியப் பிரதேச மா நில த் தில் அமைந்திருக்கும் உஜ்ஜைனி வரலாற்றுச் சிறப்புமிக்க சோதிலிங்க நகர மாகும். இது பல்வேறு அரசர்களின் தலைநகராய் விளங்கிய சிறப்புடையது. பழைய கா ல த் தில் அமராவதி, அவந்திகை, பத்மாவதி, சிவபுரி, விசாலா என்று வழங்கப் பட்ட நகரம் இது. அவந்தி நாட்டை ஆண்ட, ஜைன மதத்தைச் சேர்ந்த, சுதன்வா என்ற அரசனால் இந்நகரம் உஜ்ஜைனி என் று பெயரிடப்பெற்றது. உத்+ஜைன என்று பிரியும் உஜ்ஜைனி என்ற சொல்லுக்கு ஜைன மதத்தை உச்ச நிலைக்குக் கொண்டு வந்த இடம் என்பது பொருள்.

உஜ்ஜைனியே முத்தித் தலங்கள் ஏழனுள் ஒன்றாகிய அவந்திகை என்பது. இது மாளவ தேசம் எனப்படும். அவந்தி நாட்டின் தலைநகராய் விளங்கியது. வேதகால முதலே இது சிறப்புடன் திகழ்ந்தது. அசோகர் இதனைத் தலைநகராகத் தன் தந்தை காலத்தில் கொண்டார். இஃது அலாவுதீன் கில்ஜியின் ஆ ட் சி க் கு ம் உட்பட்டிருந்தது. பிறகு குஜராத்துடன் சேர்க்கப்பட்டது. அக்பர் இதனை

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 3



மகாகாளம் (உஜ்ஜயினி)

(மகாராஷ்ட்ரம்)

டில்லியுடன் இணைத்துக் கொண்டார். பின்னர் இது சிண்டியா மாமன்னரின் ஆட்சியில் தலைநகராகவும் விளங்கியது. வழிவழி வரலாற்றுச் சிறப்புடைய உஜ்ஜைனி வேறு பல சிறப்புக்களும் உடையது.

புகழ்பெற்ற மாமன்னன் விக்கிரமாதித்தனும் அவனைக் கொன்ற புகழ்பெற்ற சாலிவாகனனும் வாழ்ந்த இடம் உஜ்ஜைனி. இது தலைசிறந்த கவிஞர்களாகிய காளிதாசன், பர்த்திருகிரி முதலியோர் கால்பட்ட தெய்வத் தலம். மன்னர்களால் கட்டப்பட்ட கோட்டைகளும், மாளிகைகளும் இன்றும் உள்ளன.

விக்கிரமாதித்தனுக்கு அருளிய காளியும், காளிதாசனுக்கு நாவில் நடம்புரிந்த காளியும் இந்நகரத்தின் உள்ளும், ஒருகல் தொலைவிலும் அமைந்து அருள்பாலித்து வருகின்றனர். இங்கு எழுந்தருளிய காளி அரசியல் வெற்றிகள் பலவற்றை வழிபட்ட மன்னர்களுக்கு அளித்ததாகச் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

காளி அருள் பெற்ற காளிதாசன் தன்னுடைய மேகதூதம் என்ற காப்பியத்தில்" ஏ மேகமே! விந்திய மலையிலிருந்து வடக்கே செல்லும் உனக்கு உஜ்ஜைனி நேர் வழியில் இல்லாமல் சற்று விலகியிருப்பினும் அங்குச் சென்று நீ ஈசனை வழிபட வேண்டும். உஜ்ஜைனியைக் காணமற் சென்றால் கண்பெற்றதன் பயனை அடைந்தவன் ஆகமாட்டாய்" என்று கூறித் தனக்கு அருள்புரிந்த உஜ்ஜைனியைச் சரித்திரத்தில் நிலைநாட்டி விட்டான்.

இத்தலத்திலும் தலைமையான சிவலிங்கம் நிலத்துக்கு அடியிலேயே உள்ளது. இது பத்ம புராணத்திற் கூறப் பட்ட மூன்று சிறப்பான இலிங்கங்களுள் ஒன்று. இது மிகவும் சிறிய வடிவை உடையது. மேலே உள்ள இலிங் கம் 'ஓங்கார ஈசுவரர்' என்றழைக்கப்படுகிறது.

இங்குள்ள சிப்ரா நதி சிறியதெனினும் மகிமையால் பெரியது. ஆலயத்துக்கு அண்மையில் உள்ள 'புஷ்கரிணி' சிவகங்கை வடிவமாகக் காட்சி தருகிறது. ஆலயத்திற்கு எதிரில் 'கோடி தீர்த்தம்' என்ற திருக்குளம் உள்ளது. இதன் நீரின் நிறம் அடிக்கடி மாறும் என்பர். சிப்ரா ஆற்றின் கரையில் ஆளரவமற்ற இடத்தில் பைரவர் கோயில் உள்ளது.

இங்கு வந்து மகாகாளரை வணங்குவோர் ஓங்காரே சுவரர், அகலேசுவரர், ஹரசித்திமாதா (விக்கிரமாதித்தன் வழிபட்ட காளி) ரிணமுக்தேசுவரர், மங்களேசுவரர், விநாயகர் ஆகிய மூர்த்திகளை வணங்குவதோடு கண்ண னுக்கு ஆசிரியரான சந்தீபன முனிவரின் திருக்குடில் இருந்த இடத்தையும், கவிஞர் பர்த்திருகிரியின் குகையையும் கண்டு வணங்க வேண்டும் என்பர்.

உஜ்ஜைனி, பி. பி. சி. ஐ, ஜி. ஐ. பி. புகைவண்டி கள் கூடும் இடம். இந்தூரில் புகைவண்டி ஏறி பதேபாத் (Fatch bad) சந்திராவதி கஞ்ஜ் (Chandravathi Ganj) சென்று வண்டிமாறி அங்கிருந்து 15 கல் தொலைவிலிருக் கும் உஜ்ஜைனியை அடையவேண்டும். பயணிகள் தங்கச்

சிப்ரா நதிக்கரையிலும், நகரத்திற்குள்ளும் பல வசதி மிக்க அறச்சாலைகளும் திருமடங்களும் உள. குவாலிய மன்னரின் அறச்சாலை மிகச் சிறப்புடையது.

புராண வரலாறு

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணர் வாழ்ந்துவந்தார். அவருக்கு நான்கு குமாரர்கள். அவர்கள் நல்லொழுக்கத்தாலும், சிவபூசை மகிமையாலும் அவந்தி தேசமே ஒளிபெற்றுத் திகழ்ந்தது. இரத்தினமாலா என்ற மலையிலிருந்து வந்த தூஷணன் என்ற அசுரன் தன் அமைச்சர் ஒத்துழைப்புடன் நாடெங்கிலும் நல்ல செயல் நடக்க ஒட்டாமல் தடுத்து வந்தான். பல்வேறு இடங் களிலுள்ள அந்தணர்களுடன்கூடி வேதப்பிரியன் குமாரர் கள் அசுரனை அழிக்கச் சிவபெருமானை வேண்டிப் பூசை செய்தனர். பூசைக்குப் பார்த்திவலிங்கம் செய்ய மண் எடுத்த இடம் இன்று ஒரு பெரிய குளமாக உள்ளது. ஒரு நாள் அந்தணர் பூசையிலிருக்கும்போது அசுரன் அவர்களைத் துன்புறுத்த வந்தான். அக்குளத்திலிருந்து மகாகாளேசுவரர் தோன்றி அசுரனை அழித்து அந்தணர் வேண்டுகோட்படி சிப்ராநதிக்கரையிலுள்ள உஜ்ஜைனி யிலேயே சோதிலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். இதற்குத் துணைலிங்கம் துக்தேசலிங்கம் ஆகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க உஜ்ஜைனி சோதிலிங் கத்தை வழிபட்டால் அசுர குணம் நீங்கி மனிதர் அமர குணம் பெறுவர்.

4. ஓங்காரம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தியெ ழும்பழைய வல்வினை முடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக் (கு)
எந்தை பிரானுரை என்றுகொல் எய்துவதே


சுந்தரர்

இது நர்மதை நதிக்கரையில் அமைந்த சோதிலிங்கத் தலமாகும். நர்மதையும் காவேரியும் கலந்து கூடும் இடம் ஓங்கார வடிவமாக அமைந்துள்ளதென்று இங்கே சொல்லுகிறுர்கள். 'மாந்தாதா' என்ற மாமன்னன் இங்கிருந்து ஆண்டமையால் இப்பதிக்கு 'மாந்தாதா' என்ற பெயர் ஏற்பட்டது. இன்றும் இங்குள்ள மலை மாந்தாதா ஆசிரமம் என்று வழங்கப்படுகிறது.

இங்குள்ள இறைவனின் பெயர் ஓங்காரேசுவரர். ஓங்காரேசுவரர் ஆலயத்தில் மாந்தாதாவின் திருவுருவம் வணங்கப்படுகிறது. பிரணவப் பொருளாம் ஐங்கரக் கணபதி ஐந்து முகமுடையவராக இத்தலத்தில் காட்சியளிக்கிருர். ஓங்காரேசுவரர் கோயில் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. ஐமுகக் கணபதியை அடியவர் சிறப்பாக வழிபடுகின்றனர்.

இங்குள்ள சிவலிங்கம் தான்தோன்றிமூர்த்தி. வழிபாட்டுப் பீடத்தில் தான்தோன்றிமூர்த்தி ஒன்றும் விந்திய மலை வழிபட்ட பார்த்திபலிங்கமூர்த்தம் ஒன்றும் அமைந்திருக்கக் காணலாம். இந்த இலிங்கங்கள் முறையே ஓங்காரேசுவரம், அமலேசுவரம் என்று வழங்கப்படுகின்

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 4



ஓங்காரம் (மாந்தாதா)

(மகாராஷ்ட்ரம்)

றன. அமலேசுவரத்தை அமரேசுவரம் என்றும் சிலர் வழங்குகின்றனர். இங்குள்ள சோதிலிங்கத்திற்குத் துணை லிங்கம் கர்த்தமேச லிங்கம் ஆகும்.

ஓங்காரேசுவரம் அமலேசுவரம் ஆகிய இரண்டு கோயில்களைத் தவிர வைடூரிய மணி பர்வதம் என்னும் குன்றின்மேல் கவுரி சோமநாதருடைய ஆலயமும் உள்ளது. இதிலிருக்கும் சோமநாத மூர்த்தி 5 அடி உயர முடையது. இந்தச் சிவலிங்கம் முற்காலத்தில் தூவெண் நிறமாக இருந்ததாகவும், முன்னின்று வணங்குவோரின் முற்பிறப்பும், பின்னின்று வணங்குவோரின் பிற்பிறப்பும் இம்மூர்த்தியில் நிலைக் கண்ணாடியில் தெரிவது போலத் தெரியும் எனவும் ஔரங்கசீப் மாமன்னன் முன்னின்று பார்த்த பொழுது அதில் பன்றி உருவம் தெரியவே சினந்து அம்மூர்த்தியை நெருப்புக்கு இரையாக்கினதால் அது கருத்தது எனவும் கூறுவர்.

இங்குள்ள புண்ணிய தீர்த்தம் நர்மதா நதியாகும். இன்றும் இந்நதியின் அடியிலிருந்து நிறத்தாலும் உருவத்தாலும் பலவகையான சிவலிங்க பாணங்களை எடுக்கிறார்கள். இந்தப் பாணங்களினால் இந்நதியின் புண்ணியத்தை உணரலாம். யமுனையில் ஏழு நாட்களும் மாதுர்கயையில் ஐந்து நாட்களும் சரசுவதி ஆற்றில் மூன்று நாட்களும் கங்கையில் ஒரு நாளும் நீராடிய புண்ணியம் நர்மதையைக் கண்டாலே உண்டாகும் என்று புராணம் கூறுகிறது. கங்கையின் இடக்கரை மட்டுமே தூய்மையானது. நர்மதையின் இருகரையும் தூய்மை யானவை. இந்தப் புண்ணிய ஆறு ஓங்கார வடிவமாக ஓடுவது இத்தலத்திற்கே அமைந்த தனிச் சிறப்பாகும்.


பி. பி. சி. ஐ. இருப்புப் பாதையின் உஜ்ஜைனி - காண்ட்வா பாதையிலுள்ள மோர்டக்கா நிலையத்தி லிருந்து 10 கல் தொலைவில் இந்தத் தலம் அமைந் துள்ளது. ஊரில் அறச்சாலைகளும் வண்டி வசதிகளும் நிறைய உண்டு.

புராண வரலாறு

கோகர்ணத்தில் சிவவழிபாட்டை முடித்துக்கொண்டு நாரதர் விந்திய மலையை அடைந்தார். அம்மலை செய்த பூசையை ஏற்றுக்கொண்டார். அம்மலையின் இறுமாப்பை அடக்க எண்ணியவராய், "விந்தியமலையே! மேருமலை மிகவும் உயரமானது. பொன்மயமானது. தேவர்களா லும் மதிக்கத்தக்கது" என்று கூறிச் சென்றார். அழுக்கா றுற்ற விந்திய மலை சிவபூசையினால் ஆகாததொரு காரியமில்லை எனத் துணிந்து ஓங்கார உருவில் ஒரு மந்திரத்தகட்டை இயற்றிப் பார்த்திபலிங்க பூசையை ஆறுமாத காலம் இடைவிடாமலும் இடம் பெயராமலும் செய்தது. பூசைக்கு மகிழ்ந்த சிவபெருமானிடம் ஏனை மலைகளைக் காட்டிலும் தான் வளரவேண்டும் என வரம் கேட்டது. அவ்வாறே வரமளித்த சிவபெருமான் உலகத் தின் நலத்தைக் கருதி, "நீ இறுமாப்புக் கொண்டால் அப்பேருருவம் எமது அடியவரால் சிறிதாக அடங்கும்" எனவும் கூறியருளினார். தேவரும் முனிவரும் வேண்ட விந்திய மலைக்கருளிய சிவபெருமான் வழங்கு மூர்த்தி வடிவிலேயே இங்கு எழுந்தருளியுள்ளார். வணங்கவரும் அடியார்கள் நாள்தோறும் வழங்கும் மூர்த்தியிடம் அருள் பெற்று உய்கிறார்கள்.

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 5



வைத்தியநாதம் (பரலி)

(மத்தியப்பிரதேசம்)

5. வைத்தியநாதம்

பேரா யிரம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே
(அப்பர்)

இத்தலம் எது என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. வடமொழிச் சிவபுராணத்தில் "வைத்தியநாதம் சீதாபூமி" என்ற ஒரு தொடர் காணப்படுகிறது. எனவே சீதா பூமியிலுள்ள வைத்தியநாதனே சோதிலிங்கங்களுள் ஒன்று என்று சிலர் துணிகின்றனர். இது பீகார் மாநிலத்தில் உள்ளது. இங்கே தென்னாட்டுப் புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுவரன் கோவிலில் நடைபெறுவது போன்று குழந்தைகளுக்கு முடி இறக்குதலும் மாவிளக்கு ஏற்றுதலும் போன்ற பல நேர்த்திக்கடன் நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன.

மற்றொரு வைத்தியநாதத்தலம் ஜெசிடி என்னும் நிலையத்திலிருந்து 4 கல் தொலைவில் அமைந்திருக்கிறது. இது பரலி என்றும் வழங்கும். இந்த ஊரின் பெயரே


வைத்தியநாதம் என்பது. இந்த ஊர் பர்ப்பாணியிலிருந்து 24 கல் தொலைவிலிருக்கிறது. கோயில் ஓர் உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கோயிற் கட்டடத்தில் மரவேலை அதிகம். இங்குள்ள மண்டபத்தில் ஓர் ஆள் அணைத்துப் பிடிக்க முடியாத அளவு பெரியதாகவும், பனைமரத்தைப்போல் மிக உயரமாகவும் உள்ள காட்டு மரத் தூண்கள் பல. நிறுத்தப்பட்டிருக்கின்றன. இக் கோயில் இப்பொழுதும் நல்ல நிலையில் உள்ளது. ஸ்ரீ பைஜநாதலிங்கம் என்பது இறைவன் திருப்பெயர். இலங்கையிலிருந்து இராவணனால் கொண்டுவரப்பட்ட சிவலிங்கமானதால் இதனை வணங்குவது தனிச் சிறப்பு உடையதாகும்.

புராண வரலாறு

கைலை மலையில் இராவணன் பலகாலம் பூசை செய்தான். பலன் கிடைக்காமையால் இமயமலையின் தென்புறத்தில் பெரிய வேள்விக்குழி அமைத்துத் தன் தலைகளை ஒவ்வொன்றாகக் கொய்து வேள்வி செய்தான். பத்தாவது தலையை வெட்ட முனையும் பொழுது சிவபெருமான் நேரே தோன்றிப் பகைவருக்கஞ்சா வன்மையையும் அறுத்த தலைகள் மீண்டும் வளரும் தன்மையையும் அருளினார். இந்த இடமே வைத்திய நாதம்.

அறுந்த தலையை வளர அருளிய பெருமானை வைத்தியநாதத்தில் வணங்கினால் அடியாரின் துயர் தீரும் என்பது வெள்ளிடை மலை.

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 6



பீமசங்கரம் (டாகினி)

(மகாராஷ்ட்ரம்)

6. பீமசங்கரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்

புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்

அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே

அப்பர்

மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இத்தலம் பூனாவிலிருந்து 57 கல் தொலைவிலும் பம்பாயிலிருந்து 62 கல் தொலைவிலும் உள்ளது. மாஞ்சர் என்ற நகருக்குச் சென்று மலையில் ஏறி இத்தலத்தை அடையவேண்டும். சிவராத்திரி சமயத்தில் ஏராளமாக மக்கள் இங்கே கூடுவர். பீமசங்கரத்தில் பயணிகள் தங்க வசதியான தங்கில்லம் உள்ளது.


இங்குள்ள இறைவனின் திருப்பெயர் பீமசங்கரர். பீமசங்கரர் ஆலயம் காட்டின் நடுவே உள்ளது. சிறியதான இந்த ஆலயம் இப்பொழுது சிதைந்து காணப்படுகிறது. ஆலயத்தினுள் இரு நந்திகேசுவரமூர்த்திகள் உள. ஒன்று பழையது. மற்றொன்று புதியது. அண்மையில்

தோன்றி ஓடும் பீமாநதி இங்குள்ள புண்ணிய தீர்த்த மாகும். பீம சங்கரலிங்கம் ஒரு முழ உயரமும் குறைந்த பருமனும் உடையது.

புராண வரலாறு

கும்பகர்ணனுடைய மகனுகிய பீமன் தன் ஆற்றலால் அறந்தவறி நடந்த அசுரன். கடுந்தவம் இயற்றிப் பிரம்ம தேவனிடம் கணக்கிலா ஆற்றலே வரமாகப் பெற்றவன். காமரூபத்தரசனைச் சிறையிலடைத்து அவன் படைகளைப் பறித்துத் தேவருக்கும் மக்களுக்கும் துன்பம் விளைவித்து வந்தான். சிறையிலடைபட்ட அரசனும் அவன் தேவியும் சிவபூசை செய்தனர். தேவர்களும் தவமியற்றினர். சிறையில் தவம் செய்யும் அரசனைப் பூசையை நிறுத்தும்படி பீமன் கட்டளையிட்டான். அரசன் நிறுத்தாமையால் அவனைக் கொல்ல வாளை வீசினுன். தேவர் தவத்திற்கும் அரசன் பூசைக்கும் மகிழ்ந்த சிவபெருமான் அரசன் வணங்கிய பார்த்திபலிங்கத்தினின்றும் தோன்றிப் பீமனுடன் போரிட்டு அவனை வீழ்த்தினுர். பிறகு அன்பர் வேண்டுகோளுக்கிணங்கி அருள் வழங்கு மூர்த்தியாகப் பீமனைக் கொன்ற சங்கரன் என்ற பொருள்தரும் பீமசங்கரம் என்ற பெயரோடு எழுந்தருளினுர். இந்த லிங்கத்திற்குத் துணைலிங்கம் பீமேசலிங்கம்.

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 7



இராமேஸ்வரம் (தமிழ்நாடு)

7. இராமேசுவரம்

கோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மை எல்லாம்
வீடவே சக்க ரத்தால் எறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்சமேநீ நன்னெறி யாகு மன்றே

அப்பர்

இராமேசுவரத்தை அறியாதார் தென்னாட்டில் யாருமிலர். ஆண்டுதோறும் வந்துபோகும் வடநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையினல் இதன் நாடுதழுவிய புகழை நன்கறியலாம். இது வங்காளக் குடாக்கடலில் உள்ள ஒரு சிறிய தீவு. இங்குள்ள தனிக்கோடி தென்கோடி மும்முனைகளுள் ஒன்று. இது தேவாரப் பதிகம்பெற்ற திருத்தலம். இது தீர்த்தச் சிறப்புடையது. காசியில் நீராடியவர்கள் இராமேசுவரத்தில் நீராடினல்தான் நீராடிய புண்ணியம் கிடைக்குமென்று புராணங்கள் கூறுகின்றன. இங்கே கடல் நீராடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். எல்லா மதத்தாரின் அறச்சாலைகளும் இங்கே உண்டு.

இத்தீவை இந்தியாவினின்றும் பிரிப்பது பாம்பன் கால்வாய். இக்கால்வாயில் மின்சாரத்தால் இயங்கும் தூக்குபாலம் இருக்கிறது.

பிள்ளைப்பேற்றை விரும்புகின்ற தென்னிந்தியர்கள் இங்கே பெருங்கூட்டமாகக் கூடுகின்றனர். வடநாட்டுப்

பயணிகளின் வருகையால் இவ்வூரின் வருவாயும் பெரு மையும் கூடுகின்றன.

இராமன் இலங்கைக்குப் போவதற்கு கட்டிய சேதுக் கரை இங்கேதான் உள்ளது. கடல்கூடும் தனிக்கோடி என்னும் முனை சிறந்த நீராட்டுத் தலமாகும்.

இங்குள்ள இராமநாதப் பெருமான் இராமனால் நிறு வப்பெற்று வழிபடப் பெற்றவர். அம்மையின் பெயர் மலைவளர் காதலி. இக்கோயிலில் நள்ளிரவுப் பூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கோயில் அமைப்பு

இது தென்னாட்டின் மிகப்பெரிய கோயில்களுள் ஒன்று. இதனுடைய திருச்சுற்று மண்டபம் (பிரகாரம்) உலகிலேயே மிகப் பெரியது. இக்கோயில் நான்கு வாயில் களையுடையது. கிழக்கு வாயிலோரம் இராமநாதப் பெரு மானின் திருவாயில் அமைந்திருக்கின்றது. ஆலயத் தூண்களில் சேதுபதி அரசர்களின் திருஉருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இராமன் சீதையுடனிருந்து இராமநாதப் பெருமானை நிறுவி வணங்கும் சித்திரங்கள் காணப்படுகின்றன. வடக்குத் திருச்சுற்றில் வணிகவளம் மிக்க ஒரு மண்டபம் உள்ளது. இதன் நீளம் 4000 அடி. அகலம் 21 அடி. மண்டபத்தின் இரு புறங்களிலிருந்தும் வெளிச்சம் கோவிலுக்குள்ளே ஊடுருவிக்கொண்டு வரு வது கண்கொள்ளாக் காட்சியாகும். கோயில் திருப்பணி செய்தவர்களில் சேதுபதி குடும்பத்தாரும் தேவகோட்டை

ஜமீந்தார் குடும்பத்தாரும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தீர்த்தங்கள்

இராமேசுவரம் ஒரு தீர்த்தச் சிறப்புத் தலம். அக்கினி தீர்த்தம், கோடி தீர்த்தம் முதலியன குறிப்பிடத்தக்கன. சீதையை மீட்ட இராமன் அவள் கற்பைச் சோதிக்க அக்கினியில் மூழ்கச் செய்தான். சீதாதேவியைச் சோதித்த பாவம் தீரும்படியாக அக்கினி தேவன் கடலிலே நீராடிச் சீதையை வணங்கினன். இராமனும் அக்கினி தேவனைப் பார்த்து "நீ கடலில் மூழ்கினமையால் இவ்விடம் அக்கினி தீர்த்தம் என வழங்கப்படும். இத்தீர்த்தம் நீராடினோர் அனைவர்க்கும் பாவத்தைப் போக்கிப் பதமளிக்க வல்லதொரு தீர்த்தமாக விளங்கும்" என்று அருள் செய்தார்.

புராண வரலாறு


சீதையைக் கவர்ந்த இராவணனைக் கொன்று சீதையை மீட்க எண்ணி வானரப்படைகளுடன் இராமன் தெற்குக் கடற்கரையை அடைந்தான். இராவணனுடைய பலத்தைக் கேட்டுக் கலங்கிய இராமன் குடிக்க நீர் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். ஆனல் கொண்டு வந்த நீரைச் சிவபூசை செய்யாமல் குடிக்க மனம் இன்றிச் சிவபூசை செய்து அந்தத் தூயநீரைக் கடவுளுக்குப் படைத்தான். அன்பை வியந்து தோன்றிய சிவபெருமான் அவனுக்கு இராவணனைக் கொல்லும் வலிமை அளித்தான். பிறகு இராமன் கடலில் அணைகட்டி இலங்கை சென்று வெற்றி பெற்ருன். இராமனல் பூசிக்கப்பட்ட

இந்தச் சிவலிங்கம் இராமேசன் எனப்படும். இராவணனைக் கொன்றமையால் உண்டான பாவம் நீங்குவதற்காக இராமனுற் சிவலிங்கம் நிறுவி வணங்கப்பட்டதாகவும் சில புராணங்கள் கூறும். இதற்குக் குப்தேசலிங்கம் துணைலிங்கம்.

அண்மையில் குடமுழுக்குச் செய்யப்பெற்ற இராமேசுவரத்தின் பெருமை எவ்வளவு கூறினுலும் நிறைவுருது. வடநாடு-தென்னுடு ஒற்றுமைக்குப் பாலமாக விளங்கும் இராமேசுவரம் பாரதநாட்டுப் பண்பாட்டுக் கருவூலமாகவும் விளங்குகிறது.

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 8



நாகேசம் (தாருகாவனம்)

(மகாராஷ்ட்ரம்)

8 நாகேசம்

நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல

துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமீச் சரம்

உறையூர் கடலொற்றி யூருற் றத்தூர்
ஓமாம் புலியூரோர் ஏட கத்தும்

கறையூர் கருப்பறியல் கன்றுப் பூரும்
கயிலாய நாதனையே காண லாமே

(அப்பர்)

தாருகாவனம் என்ற மறுபெயர் அமைந்த நாகேசம் சோண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து 14 கல் தொலைவில் உள்ளது. தாருகையும் தாரகனும் தங்கி வழிபட்ட தலமாதலின் இப்பகுதிக்குத் தாருகாவனம் என்ற பெயர் வழங்கலாயிற்று. சோதிலிங்கப் பெருமானாகிய நாகேசுவரர் கோயில் அமைந்த ஊர் அவுண்டா என வழங்கப்படுகிறது.

இத்தலத்துறையும் இறைவன் திருப்பெயர் நாகநாதர் அல்லது நாகேசர் என்பது. இத்தலத்தில் சிவலிங்கம் தெற்கு முகமாகத் திரும்பியிருக்கிறது. அதாவது பாணமிருக்கும் பீடத்திலுள்ள கோமுகம் கிழக்கு நோக்கியுள்ளது. கிழக்கு நோக்கியிருக்கும் கோமுகத்தோடு கூடிய சிவலிங்கத்தை வேறு எங்கும் காண்பது அரிது. நந்தி

பலிபீடம் முதலியனவும் கீழ்ப்புறமாகவே உள்ளன. இவ்வாறு இருப்பதற்கும் வரலாறும் கூறப்படுகிறது. அவ்வரலாறு தென்னாட்டில் திருப்புன்கூரில் திருநாளைப் போவாருக்கு நந்தி விலகிய வரலாறு போன்றது. நாம்தேவ் என்றமெய்யடியார் இறைவன் எதிரில் பாடி வணங்கிக் கொண்டிருந்தார். அங்கு வழிபட வந்த அந்தணர் சந்நிதியை மறைக்காமல் விலகியிருக்கும்படி நாம்தேவை பணித்தனர். எல்லாத்திசைகளிலும் முகமுடைய ஈசனுக்கு எத்திசையில் முகமில்லை என்பதைக் காட்டுங்கள். நான் அங்கு சென்று வழிபடுகிறேன் என்று நாம்தேவ் கூறினர் சினமுற்ற அந்தணர் அவரைத் தூக்கிக்கொண்டுபோய் தென்புறத்தில் விட்டனர். அந்தணர் திரும்பி வந்தபோது ஆண்டவன் தென்புறமாகத் திரும்பியிருந்தான். பிழை உணர்ந்த அந்தணர் நாம்தேவை வணங்கி உய்ந்தனர். நாம்தேவுக்குத் திரும்பிய தேவதேவன் இங்கே தெற்கு நோக்கியிருந்து திருவருள் பாலிக்கின்ருன்.

இந்தச் சிவலிங்கம் இருக்கும் இடம் பண்டு நீரினுள் ஆழ்ந்து மறைந்திருந்தது. பாண்டவர் வந்து வணங்கிய பிறகு அது வெளிப்பட்டதென்பர். சிவலிங்கம் இருக்கும் கருவறை மலையைக்குடைந்த ஒரு குகைக்குள் இருக்கிறது. அக்குகையின்மேல் மற்ருெரு கருவறைஅமைத்து அங்கும் ஒரு சிவலிங்கத்தையும் நந்தியம்பெருமானையும் அமைத்துள்ளனர். மகமதியர் தீங்கிற்குப் பயந்து உண்மை லிங்கத்தை உள்ளேயும் வேறு லிங்கத்தை வெளியேயும் வைத்தனர்.

புராண வரலாறு

வினைகளே பயனளிக்கும், கடவுள் வேறில்லை என்ற துணிவுடன் இருந்த தாருகாவன முனிவர்களின் எண்ணத்தை யகற்றி உண்மையை உணர்த்த மோகினிக் கோலம் கொண்ட மாலும் பிச்சாண்டிக் கோலம் கொண்ட சிவனும் தாருகாவனம் சென்ற வரலாறு பற்றியதே நாகேசம். இன்னொரு புராண வரலாறும் உண்டு. தாருகன் தாருகை என்ற அரக்க தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். தாருகை மலைமகளை நோக்கிக் கடுந்தவமியற்றிப் பல்வேறு வரங்களைப்பெற்ருள். நினைத்தபடி இயங்கக்கூடிய பதினுறு யோசனைப் பரப்புள்ள நந்தவனத்தின் நடுவில் அழகிய மாளிகை ஒன்றைப் பெற்று அதில் கணவனுடன் வாழ்ந்து வந்தாள். வரம் பெற்ருலும் அந்தணர்களை வதைத்து வந்தாள். ஔர்வ முனிவரின் சாபத்தால் அசுரர் பலர் அழிந்தனர். எஞ்சியோரை அழைத்துக்கொண்டு தாருகை தன் இருப்பிடத்தைக் கடலில் அழுத்தினுள். சுப்ரியன் என்ற வைசியன்' சிவபூசை செய்தமைக்காகத் தாருகனுல் சிறையிலடைக்கப்பட்டான். சிறையிற் பூசை செய்த வைசியனைத் தாருகன் துன்புறுத்தினுன். அடியார் துயர் பொறுக்காத சிவபெருமான் வைசியன் வணங்கிய இலிங்கத்தினின்றும் தோன்றித் தாருகனை நெற்றிக் கண்ணுல் நீருக்கினுன். ஆனுல் உமாதேவியிடம் வரம் பெற்றுத் தாருகை, அசுரவம்சம் அழியாமல் காத்து வந்தாள். ஈசனும் அசுரர்களால் அன்பர்களுக்குத் துன்பம் வராது தாருகா வனத்தில் எழுந்தருளிக் காத்து வருகிருர். இந்த அருள் மூர்த்திக்குப் போகேசர் என்ற பெயரும் சிவ புராணத்தில் காணப்படுகிறது. இதற்கு ஜில்லிகா, சரசுவதி சங்கமத்தில் உள்ள பூதேசுவரலிங்கம் துணை லிங்கம்.

9. காசி (விசுவேசம்)

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி

வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்

பெண்ணை அருட்டுறைதன் பெண்ணா கடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூரும்

கண்ணை களர்க்காறை கழிப்பா லையும்
கயிலாய நாதனையே காண லாமே

(அப்பர்)

வாரணாசி என்றும், விசுவேசம் என்றும் அழைக்கப் படும் இத்தலம் முக்தியளிக்கும் ஏழுதலங்களில் ஒன்று. உத்தரப் பிரதேச மாநிலத்தில் உத்தரவாகினியான பாகீரதியின் மேல்கரையில் அமைந்த இத்தலம் உலகப் புகழ்பெற்றது. காசித் தலத்தின் மகிமையைக் காசி காண்டம் என்னும் நூல் 100 அத்தியாயங்களால் கூறுகிறது.

கருமங்களை நாசம் செய்வதாலும், சிவஞானத்தால் பிரகாசமடையச் செய்வதாலும் இத்தலத்திற்குக் 'காசி' என்ற பெயர் வந்தது. வாரணா, அசி என்ற இரண்டு ஆறுகளின் கலப்பிற்கு இடையில் அமைந்தமையால் 'வாரணாசி' எனவும், ஈசனால் எந்நாளும் விடப்படாமலிருத் தலின் 'அவிமுக்தம்' எனவும் 'ஆனந்தவனம்' எனவும்,

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 9



விஸ்வேசம் (ஸ்ரீ காசி)

(உத்திரப்பிரதேசம்)

மகாச்மசானம் எனவும் இப்பதி பல்வேறு காரணப் பெயர் களைப் பெற்றது. காசியில் இறந்தால் முக்தி என்பது அன்பர்களின் அசைக்க முடியா நம்பிக்கை. இது தேவார வைப்புத் தலமாகும்.

இங்குள்ள சோதிலிங்கக் கோயில் விசுவேசம் எனப் படும். இறைவன் திருப்பெயர் விசுவேசுவரர். இறைவி பெயர் விசாலாட்சி. விசுவேசுவரர் ஆலயம்தான் காசியி லுள்ள கோயில்களில் முக்கியமானது. ஔரங்கசீப் கோயிலை இடித்து அங்கு மசூதி கட்டினன். அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கிய சிவபெருமான் நாராயண பட்டர் என்ற குருக்களின் கனவில் தோன்றி" நான் மணிகர்ணிகையில் இருக்கிறேன் ; நீ ஒரு முழுக்குப் போட்டவுடன் உன் கையில் அகப்படுவேன்; நீ ஒரு கருவறை மட்டும் கட்டி அதனுள் கற்பூரத்தைப் போடு. கற்பூரம் எங்கே பற்றி எரிகிறதோ அங்கே என்னை நிலைநாட்டவேண்டும்" என்ருர். வலப்பக்க மூலையிற் கற்பூரம் பற்றிக்கொண்டது. அவ்விடத்தில் இலிங்கம் அமைக்கப்பட்டது. சிவலிங்கம் இருக்குமிடம் தாழ்ந் துள்ளது. இலிங்கத்தைச் சுற்றிலுமுள்ள கட்டிற்கு வெள்ளித் தகடு அடித்துள்ளார்கள். சிகரத்தில் தாமிரத் தகடு பொதிந்து மேலே பொன் பூச்சுப் பூசியுள்ளனர். கதவுகளும் பொன்மயமாகவே அமைந்துள்ளன. இங்கி ருந்து முக்கால் பர்லாங்கு தொலைவில் ஆதிவிசுவராலயம் உள்ளது.

இங்கே பிந்துமாதவர், அன்னபூரணி, விசாலாட்சி, அட்சயவடம், கால பைரவர், தண்டபாணி, துண்டிராஜ கணபதி முதலான பல கோயில்களும் உள. விசாலாட்சி ஆலயம் விசுவநாதர் ஆலயத்திற்குத் தொலேவிலிருந் தாலும் தென்ஞட்டில் நடப்பது போன்ற பூசை முறை களும் இசைக் கருவிகளும் உ ண் டு. தென்ஞட்டுக் குருக்கள் ஒருவரே இங்கே பூசனே செய்கிருர்.

காசியில் அமைந்த நகரச் சத்திரம், சிறந்த முறையில் பயணிகட்குப் பயன்பட்டு வருகிறது. தென்ஞட்டவர்க்கும் சிறப்பாக நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கும் காசியில் தனி மரியாதை உண்டு. சாசியாத்திரையைத் தென்ன கத்து மக்கள் தம் பிறவிப் பயஞகக் கருதி மேற்கொள்வது உலகறிந்த செய்தி. வடநாட்டாருக்கு இராமேசுவரமும் தென்ஞட்டவர்க்குக் காசியும் இரண்டு கண்களாக விளங்குகின்றன.

இராமேசுவரம் போலவே காசியும் தீர்த்தச் சிறப்புத் தலம். கங்கை இங்கே உத்தரவாகினியாக ஓடுவது கிடைத்தற்கரிய சிறப்பாகும். இக் கங்கையில் மட்டும் காசித் தலத்திற்குள்ள 64 கட்டடங்கள் என்னும் நீராடு துறைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டத்திற்கும் தனித்தனி மகிமை புராணங்களில் கூறப்படுகிறது. சக்கர தீர்த்தம், ஞானவாவி, துளசி கட்டம், சிதா கட்டம், பஞ்சகங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம், கேதார கட்டம் முதலியன குறிப்பிடத் தக்க கட்டங்களாகும்.

இன்னும், பார்க்கத்தக்க பல்வேறு கோயில்களும்

காசியில் உள்ளன. காசியிற் பயணம் மேற்கொள்ள வேண்டிய முறை, வணங்குமுறை, போக்குவரவுக்குரிய வழி முதலியனவெல்லாம் பலவாருகப் பலரால் விரித்துக் கூறப்பட்டுள்ளன. காசிப் பயணத்தைக் காலால் நடந்த தென்னுட்டுப் பரம்பரைக்குக் காசி பற்றி விரித்துரைப்பது ஆசை பற்றியே தவிர அறிவுரைப்பதற்காக அன்று. வடக்கு–தெற்குப் பூசலுக்கு முற்றுப்புள்ளியிடும் முக்தித் தலமாக விளங்கும் காசியை நினைத்தாலே வீடுபேறு கிட்டும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி அன்று.

10. திரியம்பகம்

முக்க ணும்முடை யாய்முனி கள்பலர்
தொக்கெ ணுங்கழ லாயொரு தோலினே
டக்க ணும்மரை யாயரு ளேயலா
தெக்க ணும்மிலன் எந்தை பிரானிரே
(அப்பர்)


நாசிக்கிலிருந்து தென்கிழக்கில் 18 கல் தொலைவில் திரியம்பகம் உள்ளது. பாணகங்கை நதி திரியம்பகத்தின் கிழக்கு எல்லை. பிர்மகிரி என்ற மலையைச் சார்ந்த சிற்றூர் இத்தலம். இப்பதி கோதாவரி ஆறு மலையிலிருந்து விழும் இடத்தில் உள்ளது. இதற்குத் திரிசந்திய சேத்திரம் என்ற பெயரும் உண்டு. இங்குள்ள ஓர் ஆவுடையின் நடுப்பகுதியில் மூன்று இலிங்கங்கள் மூன்று கண்போல் அமைந்துள்ளன.

சிவபெருமானின் முடியைக் கண்டதாகப் பிரமன் பொய்சொன்னதால் சினமடைந்த சிவபெருமான் "நீ உலகில் பூசிக்கப்படாமல் போகக் கடவாய்" எனச் சாப மிட்டான். சிவபெருமான் இங்கு மலையுருவில் உள்ளான். பிறகு பிரமதேவன் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் நான் உன் பெயருடன் இணைந்து வேறுபாடின்றி இருக் கிறேன்' என்று வரங்கொத்தார். ஆகலின் அம்மலை 'பிரம்மகிரி' என்றே வழங்குகிறது.

கோயிலைச் சுற்றிக் கோட்டை போன்று மதில் உண்டு பக்கத்திலுள்ள சிறுகோயில்களில் அஷ்ட பைரவர்

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 10



திரியம்பகம் (கௌதமீதீரம்)

(மகாராஷ்ட்ரம்)

முதலான மூர்த்திகள் உள்ளன. கருவறையில் கோலக் கல்லால் ஆன தான்தோன்றி லிங்கபீடம் உள்ளது. மற்ற இடங்களைப்போல் இங்கே இலிங்கம் இல்லை. பீடத்தின் நடுவில் ஒரு சிறிய செம்பு கொள்ளக்கூடிய குழி உள்ளது. இதனடியில் பிர்ம, விஷ்ணு, மகேசுவரர் வடிவத்தில் சிறிய உருவங்கள் உள்ளன. இலிங்க பீடத்தின் மேற்குப் பகுதியிலிருந்து கண்ணுக்குப் புலப்படாமல் கங்கை பெருக்கெடுப்பதால் அந்தப் பள்ளமான இடம் எப்பொழுதும் ஈரமாகவே இருக்குமாம். பெருமான் பெயர் திரியம்பக நாதர்.

இதுவும் தீர்த்தச் சிறப்புத் தலமாகும். குசாவர்த்த தீர்த்தம், கனகல தீர்த்தம், கஞ்சனதீர்த்தம், கங்காத் துவாரம், வில்வ தீர்த்தம், கோடி தீர்த்தம் என்பன குறிப்பிடத்தக்கன.

கார்த்திகை மாதம் முழுமதி நாளன்று தேரோட்டத் திருவிழா இங்கே நடைபெறுகிறது. திரியம்பக நாதருக்கு ஓர் அழகிய மணிமுடி இருக்கிறது. ஒவ்வொரு சோமவாரத்தின்போதும் இம்முடியைச் சார்த்துகின்றனர். இத் தலத்தைச் சுற்றிலும் பல்வேறு கோயில்கள் உள்ளன பிர்மகிரியைச் சுற்றிவர 18ல் நடக்கவேண்டும். அரிகரப் பிரதட்சணம் என்பது அதைவிடப் பெரியது; 40 கல் நடக்கவேண்டும் அத்திருச்சுற்றைச் சுற்றுகிறவர்கள் பல்வேறு கடவுளர்களை வழிபடலாம். இத்தலத்தில் நவசித்தருள் ஒருவராய கோரகநாதருடைய உருவமும் இருக்கிறது.

புராண வரலாறு

உலகம் துன்பமடைந்தபொழுது கௌதம முனிவர் தன் மனைவி அகலிகையுடன் பிரமகிரியில் கடுந்தவம் இயற்றி வருணனுடைய சொற்படி குளம் ஒன்று தோண்டினர். அதற்கு வற்றாத நீரும் அங்கு செய்யும் செயல்களுக்கு வரம்பெற்ற பயனும் உண்டாகும்படி அருள் பெற்றார். அங்கு அவர் வணங்கிய இலிங்கம் கௌதமேசுவரம் எனப்படும். பல இடங்களிலுள்ள முனிவர்கள் தத்தம் மனைவியருடன் கௌதமரது திருக்குடில் சிறப்பைக்கேட்டு அங்குவந்தனர். மனைவியரின் பொறாமை உரையைக் கேட்டுக் கௌதமரின் குடும்பத்தைத் துரத்துமாறு விநாயகரிடம் வேண்டினர். விநாயகர் மறுத்தார். இதனால் விளையும் தீமை குறித்து எச்சரித்தார். முனிவர்கள் மீண்டும் அதையே வேண்டினர். விநாயகர் பசுவின் உருத்தாங்கிக் கௌதமரின் பயிரை மேய்ந்தார். கௌதமர் கோலெடுத்து ஓச்சும்போதே அம்மாயப்பசு உயிர்நீத்தது. அதனால் கௌதமர் பசுக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டிய முனிவர்கள் "பிரம்மகிரியை 101 முறை சுற்றவேண்டும் என்றும் கோடி பார்த்திபலிங்கங்களை வழிபடவேண்டும் என்றும் கங்கையை வருவித்து அதில் மூழ்கவேண்டும் என்றும் பாவத்திற்குக் கழுவாய் கூறினர். கௌதமரும் அப்படியே செய்தார். சிவபெருமான் வெளிப்பட்டு முனிவர்களின் தீய செயலை வெளிப்படுத்தி உனக்குப் பாவமில்லை என்றருளினர். சடையினின்றும் கங்கையைச் சிறிதளவு கொடுத்தார். கௌதமர் பிரமகிரியில் அத்திமரத்தின் வேரிலிருந்து வெளிவந்த கங்கை

யில் நீராடினர். அந்த இடத்திற்கே 'கங்காத்துவாரம்' என்று பெயர். கௌதமர் வேண்டிக் கொண்டுவந்த கங்கை கோதாவரி எனப்படும். கௌதமர் கொண்டு வந்தமையால் கௌதமி என்ற பெயரும் அதற்கு உண்டு. தனக்குத் தீங்கிழைத்த முனிவர்களையும் தூய்மையாக்கும் படி கௌதமர் கங்கையை வேண்டினர். கோதாவரிக் கரையில் கௌதமருக்கருளிய மூர்த்தியாகிய திரியம்பக நாதர் சோதிலிங்கங்களுள் ஒன்ருகத் திகழ்கிருர். முனிவர் கள் தூய்மையடைந்து நீராடிய இடம் கங்காத் துவாரத்தின் கீழ்ப்புறம் அமைந்த குசாவர்த்தம் எனவும் உலகிலுள்ள அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களும் வந்து கங்கையைக் கண்ட இடம் கோடிதீர்த்தம் எனவும் கூறப் படும். சிம்ம ராசியில் குரு இருக்கும் ஓராண்டு முழுவதும் இங்கு நீராடுவது மிக உயர்ந்த பயனை அளிக்கும் என்பர். இதற்குத் துணேலிங்கம் சித்தேசலிங்கம்.

11. கேதாரம்

கந்தமா தனங்கயிலை மலைகே தாரம்
காளத்தி கழுக்குன்றம் கண்ணார் அண்ணா

மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப் பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏம கூடம்

விந்தமா மலைவேதம் சையம் மிக்க
வியன் பொதியின் மலைமேரு உதயம் மத்தம்


இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே

அப்பர்

இஃது இமயமலையிலுள்ள திருத்தலம். ரிஷிகேசத்தில் இருந்து சாலை வழியாகவும் நடந்தும் மலைமேல் ஏறியும் இத்தலத்திற்குச் செல்லவேண்டும். இது தேவாரப் பதிகம் பெற்றது. கேதாரகண்டம் என்னும் நூல் தலங்களுள் சிறந்தது கேதாரம் எனக் கூறுகிறது. கேதாரம் என்ற சொல்லுக்கு மூன்று பொருள் கூறுகின்றனர். கே என்ற சொல்லுக்குத் 'தலை' என்றும், 'தாரம்' என்ற சொல்லுக்குத் தரித்தல், மனைவி, பிளவு என்றும் பொருள் கூறுகின்றனர். சிவபெருமான் கங்காதேவியை முடியில் மனைவியாகத் தாங்கியிருக்கும் நிலை அல்லது சிவபெருமானின் தலையில் அருச்சுனன் பாசுபத அத்திரத்தால் அடித்து உண்டான வடுவுடைய நிலை அல்லது கங்கையைத் தலையில் தரித்து நிலத்தில் விழும்படி விட்ட

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 11



கேதாரம் (ஹிமாலயம்)

(உத்திரப்பிரதேசம்)

வரலாறு ஆகிய மூன்றையும் கேதாரம் என்றசொல் உணர்த்தும் என்பர். கேதாரம் செல்லும் வழியில் ஏராளமான தீர்த்தங்களும் ஆலயங்களும் உள்ளன.

இறைவன் திருப்பெயர் கேதாரேசுவரர் பனியால் மூடப்பட்டிருக்கும் ஆறுமாத காலம் தேவர்கள் வணங்குவதாகவும், பனி உறைவு இல்லாத ஆறு மாத காலம் மக்கள் வணங்குவதாகவும் கூறுவர்.

கேதாரநாதர் கோயில் தெற்குப்பார்த்து அமைந்திருக்கிறது. இங்குப் பல்வேறு மூர்த்தங்கள் உள்ளன. கோயிலின் கீழ்த்திசையில் இரண்டு மைல் தொலைவில் பாண்டவர் சங்கராச்சாரியர் முதலியோர் சென்ற சொர்க்கவாசல் என்று கூறப்படும் மலைவழி ஒன்று காணப்படுகிறது. வடமேற்கு மூலையில் மலை உச்சியிலிருந்து மந்தாகினி வழிகிறது. பின்புறம் விசுவ பர்வதமும் மேற்புறம் வாசுகிபர்வதமும் உள்ளன. இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பத்ரிநாராயணரைத் தரிசித்த புண்ணியம் உண்டு.


இத்தலம் இமயமலையின் மேலிருப்பதால் பயணிகள் வேண்டிய துணைக்கருவிகளுடன் பயணம் செய்யவேண்டும். வசதிக் குறைவான பல இடங்கள் வழியிலிருப்பதால் இப்பயணம் மேற்கொள்வோர் இது பற்றிய விரிவான நூலைப் படித்துச் செல்லுதல் நலம்.

புராண வரலாறு

காப்புக் கடவுள் திருமால் மக்களின் நன்மைக்காக நர நாராயண வடிவத்தில் இருந்து தவமியற்றினுன். பார்த்திபலிங்கத்தைச் சிவபூசை செய்தான், கிவபெருமான் வெளிப்பட்டுத் திருமாலின் வேண்டுகோளின்படி கேதாரத்தில் எழுந்தருளினுன். கேதாரம் என்று சொன்ன மாத்திரத்தில் மக்கள் தூய்மையடைய வேண்டும் என்று திருமால் கேட்ட வரத்தைச் சிவன் அளித்தான். கேதாரத்திலுள்ள வளேயலேக் கண்டவரும் கையில் கொண்டவரும் விரும்பியதைப்பெறுவர் என்பர். இங்குள்ள சோதிலிங்கத்திற்குத் துணேலிங்கம் யமுனேக் கரையிலுள்ள பூதேசலிங்கமாகும்.

உ

ஜோதிர்லிங்க ஸ்தலம் - 12



குஸ்மேஸம்

(மகாராஷ்ட்ரம்)

12. குஸ்மேசம் (குஸ்ருணேசம்)

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க

தாளானைத் தன்னொப்பார் இல்லா தானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த

தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த

கீளானைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே

அப்பர்

ஹைதராபாத் மாநிலத்திலுள்ள இத்திருத்தலத்திற்கு ஔரங்காபாத்தில் இறங்கிச் செல்லவேண்டும். இவ்வழியில் பல வசதிகள் உண்டு. தௌலதாபாத்திலும் இறங்கிச் செல்லலாம். ஆனால் வசதிகள் குறைவு.

இறைவன் திருப்பெயர் குஸ்மேஸ்வரர். இந்தச் சிவலிங்கம் சிவந்த நிறத்துடன் விளங்குகிறது. இது பார்வதிதேவி குங்குமப்பூவால் செய்து வழிபட்டது என்று கூறப்படுகிறது. சுதர்மன் என்ற அந்தணனுடைய இரண்டாவது மனைவி குஸ்மையின் பெயரால் பெருமான் குஸ்மேஸ்வரன் என்று அழைக்கப்படுகிறான். கிருஷ்ணேசுவரர் என்ற பெயரும் சில இடங்களில் வழக்கத்தில் உள்ளது. 'கிருஷ்ண' என்ற மராட்டியச் சொல்லுக்குக் 'குங்குமப் பூ' என்று பொருளாம்.

குஸ்மேஸ்வர ஆலயம் இந்தூர் தேச மகாராணி அகல்யாபாயினுல் திருப்பணி செய்யப்பட்டது. தீர்த்தக் குளம் அவராலேயே செப்பனிடப் பெற்றது. ஆலயத்துக் கருகிலுள்ள அருவியில் மழைக் காலத்தில் மட்டுமே நீர் வரும்.

ஆலயத்திற்கு அண்மையில் அனுமார் கோயிலும் பைரவர் கோயிலும் உள்ளன. ஆலயத்தில் உள்ள அவை மண்டபத்தில் ஒரு பெரிய ஆமை உருவ மூர்த்தி உள்ளது. குஸ்மேஸ்வரத்திற்கு அண்மையில்தான் உலகப் புகழ்பெற்ற எல்லோராக் குகை உள்ளது. வியாக்ரேச லிங்கம் இதற்குத் துணேலிங்கம்.

ஆலயத்திற்குப் பின்உள்ள கிணறும் குஸ்மையினுல் நாள்தோறும் பார்த்திபலிங்கம் விடப்பெற்ற திருக்குளமும் இங்குள்ள புண்ணிய தீர்த்தங்களாகும்.

புராணவரலாறு

தேவகிரி என்ற மலேயில் சுதர்மன் என்ற அந்தணன் சுதேகை என்பவளுடன் வாழ்ந்துவந்தான். சிவபூசைச் செல்வனுகிய அவனுக்குப் பிள்ளேப் பேறின்மையால் முதல் மனேவியுடைய வற்புறுத்தலினுல் இரண்டாம் மனேவியாகச் குஸ்மா என்பவளே மணந்தான். சிவபூசைச் செல்வியாகிய குஸ்மா நாள்தோறும் பூசித்த இலிங்கங்களே

ஒரே குளத்தில் விட்டுவந்தாள். சிவனருளால் அவனுக்குச் சுப்பிரியன் என்ற செல்வன் பிறந்தான். அவனுடைய மணப்பருவத்தில், முதல்மனைவி பொறாமையால் கோடரியினால் சுப்பிரியனைக் கொன்றாள். செய்தியறியாத சுதர்மனும் குஸ்மாவும் வழக்கம்போலச் சிவபூசை செய்தனர். வழக்கம்போல் இலிங்கத்தைக் குளத்திலிட்டுத் திரும்பும்பொழுது இறந்த மகன் குளத்திலிருந்து எழுந்து வந்தான். சிவன் வெளிப்பட்டு "மூத்தாள் கொன்ற உன் மகனை உயிர்ப்பித்தேன். நீ லிங்கங்களை இட்ட இக்குளமே எனக்கு ஆலயமாகட்டும். உன் பெயராலேயே விளங்குகிறேன்." என் று அருளினார். அடியார் பெயரை ஆண்டவன் சூடிய குஸ்மேஸ்வரத்தைத் திருத்தலங்களில் முடி எனலாம்.

பன்னிரு சோதிலிங்கத் திருத்தலங்களையும் பார்த்தாலும் அவற்றின் பெயர்களைக் கேட்டாலும் பார்த்தவர்களைப் பார்த்தாலும் வினைகள் நீங்கும். வீடுபேறு வழி கேட்டு நம்மை அடையும். புண்ணியத் தீர்த்தங்களில் நீராடிப் புறத்தூய்மையும் அங்குள்ள சோதி லிங்கங்களை வழிபட்டு அகத்தூய்மையும் பெற்று அடியவர் உலகம் எண்ணிய எண்ணியாங்கெய்த எம்பெருமான் அருள் வானாக. பாராத தலங்களைப் பார்த்ததுபோல் எழுதிய

எங்களுக்கும் அவற்றைப் பார்க்கின்ற பேற்றை அருள் வாளுக. எழுத வாய்ப்பளித்தார்க்கு நன்றி சொல்லி இந் நூலை நிறைவு செய்கிறோம்.

அடியவர் வாழ்க! நாட்டில்
அறங்களே ஓங்க! மக்கள்

மிடியெலாம் தீர்க! வானம்
மிகமழை தருக! ஈசன்

படியிலாக் கருணை வாழ்க!
பன்னிரு தலங்கள் வாழ்க!

முடிவிலாச் சைவ நீதி
முழங்குக உலகம் எல்லாம்!

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

திருப்பருப்பதம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. 1

நோய்புல்கு தோறிரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே!
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே. 2

துனியுறு துயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாத லிரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக் கருமுசுக் கலையுகளும்
பனியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே. 3

கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடை
எங்கணே யகலநின்ரு னெனவரு ளீசனிடம் [யான்
ஐங்கணை வரிசிலையா னநங்கனை யழகழித்த
பைங்தண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே. 4

துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந் தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே. 5

சீர்கெழு சிறப்போவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே யிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுள திடம்வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுமே. 6

புடைபுல்கு படர்கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. 7

நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தே னவலவந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை கமழ்கடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப் பருப்பதம் பரவுதுமே. 8

மருவிய வல்வினைநோ யவலம்வந் தடையாமல்
திருவுரு வமர்ந்தானிந் திசைமுக முடையானும்
இருவரு மறியாமை யெழுந்ததோ ரெரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே. 9

சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த்
தேர்ப்பின்
குடங்கொண்டுநீர்க்குச்செல்வார்போதுமின்குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே. 10

வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு ஞானசம் பந்தனல்ல
ஒண்சொலி னிவைமாலை யுருவெணத் தவமாமே. 11

திருச்சிற்றம்பலம்

60

திருவிராமேச்சுரம்

பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அலைவளர் தண்மதி யோடய லேஅடக் கிஉமை
முலைவளர் பாக முயங்கவல்ல முதல்வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகானல் இராமேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே, 1

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித்த பழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய்த விராமேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே 2

மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரரக் கன்உயிர் செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல்செய்த இராமேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகிநின் றதொரு நன்மையே 3

உரையுண ராதவன் காமமென் னும்முறு வேட்கையால்
வரைபொரு தோளிறச் செற்றவில்லி மகிழ்ந் தேத்திய
விரைமரு வுங்கடலோதமல் கும்இரா மேச்சுரத்
தரையர வாடநின் ருடல்பே னுமம்மா னல்லனே. 4

ஊ றுடை வெண்டமலை கையிலேந் திப்பல வூர்தோறும்
வீ றுடை மங்கைய ரையம்பெய்ய விற லார்ந்ததோர்
ஏ றுடை வெல்கொடி யெந்தைமேய இரா மேச்சுரம்
பேருடை யான்பெயர் ஏத்துமாந் தர்பிணி பேருமே 5

அணையலை சூழ்கட லன்றடைத் துவழி செய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத்த பழி போக்கிய
இணையிலி யென்றும் இருந்தகோயில் இரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத்தத் துயர் நீங்குமே. 6

சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல்செய்த இரா மேச்சுரம்
பனிமதி சூடிநின் றுடவல்ல பரமேட்டியே. 7

பெருவரை யன்றெடுத் தேந்தினுன் றன்பெயர் சாய்கெட
அருவரை யாலடர்த் தன்றுநல்கி அயன் மாலெனும்
இருவரு நாடிநின் றேத்துகோயில் இரா மேச்சுரத்
தொருவனு மேபல வாகிநின்ற தொரு வண்ணமே 8

... ... 9

சாக்கியர் வஞ்சமன் கையர்மெய் யிற்றடு மாற்றத்தார்
வாக்கிய லும்முரை பற்றுவிட்டுமதி யொண்மையால்
ஏக்கிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்
ஆக்கிய செல்வனை யேத்திவாழ் மின்னரு ளாகவே 10

பகலவன் மீதியங் காமைக்காத் தபதியோன்றனே
இகலழி வித்தவ னேத்துகோ யிலிரா மேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் வார்க்கில்லை யல்லலே 11

திருச்சிற்றம்பலம்

திருக்கேதாரம்

பண்-செவ்வழி

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலாற மான்கன்று துள்ளவ்வரி
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 1

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்டம் மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே 2

முந்திவந்து புரோதாய மூழ்கிம் முனிகள்பலர்
எந்தைபெம்மா னெனநின் றிறைஞ்சும் மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தநாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே 3

உள்ளமிக்கார் குதிரைம் முகத்தா ரொருகாலர்கள்
எள்கலில்லா விமையோர்கள் சேரும் மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிள்ளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங்
கேதாரமே. 4

ஊழியூழி யுணர்வார்கள்வேதத்தினெண்பொருள்களால்
வாழியெந்தை யெனவந் திறைஞ்சும் மிடமென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள் போலவ்விரை தேரிய
கேழல்பூழ்தி கிளைக்க மணி சிந்துங் கேதாரமே. 5

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரை தன்மேல்
தேறுசிந்தை யுடையார்கள் சேரும் மிடமென்பரால்
ஏறிமாவின் கனியும்பலாவின் னிருஞ்சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையோ டுண்டுகளுங் கேதாரமே. 6

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமெம்பரால்
உடைந்தகாற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல்லறை
கண்மேல்
கிடந்தவேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே. 7

அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனையருவரைதனால்
வெருவவூன்றி விரலா லடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல் சுரபுன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே. 8

ஆழ்ந்துகாணு ருயர்ந்தெய்தகில்லா ரலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்ருர்க் கிடமென்பரால் [ளைக்
வீழ்ந்துசெற்றுந் நிழற்கிறங்கும்வேழத்தின் வெண்மருப்பி
கீழ்ந்துசிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே 9

கடுக்கடின்று கழிமீன் கவர்வார்கண் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பா ரவரெய்த வொண்ணு விடமென்பரால்
அடுக்கநின்றவ் வறவுரைகள் கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமா னுறைகின்ற கேதாரமே 10

காய்த்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன வருந்தமிழ்கள் பத்தும்இசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே 11

திருச்சிற்றம்பலம்

